Compose Mail - Yahoo! Mail Inc | Chandamama:Indian children's

www.chandamama.com//archive/PdfFlip.php?lang=tamil&yr=1980&mnth=2&adOpt=0 - Google Chrome

www.chandamama.com//archive/PdfFlip.php?lang=tamil&yr=1980&mnth=2&adOpt=0

Fullscreen | Exit | 1 / 72

start | Compose Mail - Yaho... | www.chandamama.c... | My Pictures | 9:31 AM

1 - Paint

www.chandamama.com//archive/PdfFlip.php?lang=tamil&yr=1980&mnth=2&adOpt=0 - Google Chrome

www.chandamama.com//archive/PdfFlip.php?lang=tamil&yr=1980&mnth=2&adOpt=0

Fullscreen | Exit | 2 / 72

விபரம்: புதுமை
குன்றாத மொரு
மொருப்பான
பிரபல பார்லே
பிஸ்கட்டுகளுக்கு
உள்ளபோலிகள்பல.

ஆகமொத்தம் அருமையான பிஸ்கட் இன்பம்.

everest/79/PP/452 ta

Compose Mail - Yaho... | www.chandamama.c... | My Pictures | 1 - Paint | 9:31 AM

www.chandamama.com//archive/PdfFlip.php?lang=tamil&yr=1980&mnth=2&adOpt=0 - Google Chrome

அம்புலிமாமா

பிப்ரவரி 1980

பொருளடக்கம்

கேள்வியும் பதிலும் ... 6
முன்பின் யோசியாமை 7
கானகக் கரடிராயன் ... 11
தப்பிய பேர்வழி ... 19
பயில்வானின் படுதோல்வி ... 27
உத்தமன் ... 31
மந்திர மகிமை ... 33
தேவயானி ... 37
வழிப்பறிக்காரர்கள் ... 40
குருவின் சிறந்த சீடன் ... 44
பரிகாரம் ... 47
கடனைத் தீர்த்து விடு ... 48
தேவி பாகவதம் ... 51
திருடன் யார் ... 59
போட்டோ வாக்கியப் போட்டி ... 64

தனிப் பிரதி ரூ. 1-50. வருட சந்தா ரூ. 18-00.

3 - Paint
www.chandamama.com//archive/PdfFlip.php?lang=tamil&yr=1980&mnth=2&adOpt=0 - Google Chrome
www.chandamama.com//archive/PdfFlip.php?lang=tamil&yr=1980&mnth=2&adOpt=0
Fullscreen Exit 6 / 72

5 வருடம் உத்திரவாதமுள்ள 'மெரி' சூப்பர் ஸ்பெஷல் தங்க கவரிங் நகைகளை
15 வருட ஆராய்ச்சியின் பலனாக இந்தியாவில் முதன் முறையாகத் தயாரித்து
இந்தியா முழுவதிலும் அதிக அளவில் வி.பி.பி. மூலம் அனுப்பி வரும்
ஸ்தாபனம். விபரங்களுக்கு இலவச கேட்லாக் வாங்கிப் பார்க்கவும்.



மெரி கோல்டு கவரிங் ஒர்க்ஸ் 14. செங்கல்வராயன் தெரு,
ஸ்தாபிதம். 1963. தபால் பெட்டி எண்: 1405 தி. நகர். சென்னை - 600 017

கோபால் பல்பொடி

பாக்கெட்விலை: 35 காசு
வாங்கி உபயோகியுங்கள்.

தயாரிப்பவர்கள்:
எஸ். பி. எஸ். ஜெயம் அன் கோ.,
மதுரை-625 001.
MINERVA

CHANDAMAMA PUBLICATION

அம்புலிமாமா

நிறுவனர்: 'சக்ரபாணி'
ஸ்தாபக ஆசிரியர்: நாகிரெட்டி

இல்வாழ்க்கை நடத்துவது வந்த விருந்தினரை உபசரிப்பதற்குத் தான் என்கிறார் வள்ளுவர்.

இருந்தோம்பி இல்வாழ்வதெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற்பொருட்டு

என்று கூறினார். வீட்டில் பொருள்கள் சேர்த்தே விருந்தினரை உபசரித்து உதவி வந்தால் அந்த இல்வாழ்க்கை இன்பமயமாய் இருக்கும் என்பதே இதன் கருத்து. இதனை நாம் மனதில் கொள்வோம்.

துர்ஜனேன ஸம்பர்க்கம் சத்ருதாம் அபி யதுவதே.
உஷ்ணோ தஹதி அங்காரோ ஷீதோ க்ருஷ்ணாயதே கரம்.

கெட்டவர்களின் நட்போ, விரோதமோ வேண்டப் படாதவையே. ஏனெனில் இவர்களது நட்பாலும் கெடுதலே விளையும். விரோதத்தாலும் தீங்கே ஏற்படும். கரி எரியாமல் இருந்தாலும் கையைக் கருப்பாக்கி விடும். எரிந்தாலும் கையைச் சுட்டுக் கொப்பளிக்கச் செய்யும் என்பது இந்த வடமொழிச் செய்யுளின் கருத்து.

மதிமுகம்: 66 பிப்ரவரி 1980 புன்னகை: 2
தனிப் பிரதி: ரூ. 1-50 வருட சந்தா: ரூ. 18-00

start Compose Mail - Yaho... www.chandamama.c... My Pictures 3 - Paint 9:31 AM

www.chandamama.com//archive/PdfFlip.php?lang=tamil&yr=1980&mnth=2&adOpt=0

கேள்வியும் பதிலும்

கே. எஸ். ஆர். ஆஞ்சநேயுலு, குடிவாடா.

கேள்வி: விநாயகரின் நெற்றியில் பிறைச் சந்திரனே இருக்கிறதே. ஏன் முழு நிலா இருப்பது இல்லை?

பதில்: சந்திரன் விநாயக சதுர்த்தி அன்று விநாயகர் கொழுக்கட்டை தின்று நடக்க முடியாமல் வருவது கண்டு சிரிக்க விநாயகர் அவனைத் தேய்ந்து போகச் சபித்தார். பிறகு சதுர்த்தி அன்று இருக்க சந்திரனைத் தன் நெற்றி மீது வைத்துக் கொண்டாராம். இதனாலே பிறைச் சந்திரனை அவரது நெற்றி மீது காண்கிறோம்.

அ. கோபால ரெட்டி, மகம்மதுபுரம்.

கேள்வி: பூமியின் தென் கோளப் பகுதியில் துருவ நட்சத்திரம் தெரியுமா? தெரியாது என்றால் அங்கு எப்படி திசைகளை அறிவது?

பதில்: பூமத்திய ரேகைக்குத் தெற்கே உள்ள பகுதியில் துருவ நட்சத்திரத்தைக் காண விட்டாலும் தென் திசையைக் குறிக்க ஒளிவிடும் பல நட்சத்திரங்கள் அங்கு தென்படுகின்றன.

ஜி. வீரபத்திர ராவ், ராஜமகேந்திரபுரம்.

கேள்வி: இந்திரஜால வித்தைக்காரர்களின் வித்தைகள் ஏமாற்று வித்தைகளாயினும் மக்கள் அவற்றை ஏன் நம்புகிறார்கள்?

பதில்: இந்திரஜால வித்தையின் முக்கிய கவர்ச்சிகர அம்சமே 'பொய்' என்பதுதானே. அது உண்மை போலத் தோன்றுகிறது. நாடகங்கள், சினிமாக்களை கற்பனையே என்றாலும் நாம் பார்த்து உண்மை என நம்புவது இல்லையா?

ஜெ. ராஜகுமாரி, புவனேஸ்வரம்.

கேள்வி: ஒரு விஷப் பாம்பை மற்றொரு விஷப் பாம்பு தீண்டினால் அது இறக்குமா?

பதில்: ஒரு விஷப் பாம்பின் விஷம் மற்றொரு விஷப் பாம்பின் உடலில் சென்றால் அது இறக்கும்.

முன் பின் யோசியாமை

பழி தீர்த்துக் கொண்ட குரங்கின் கதையைக் கேட்ட மாபெரும் உலோபி "நீ கூறுவது சரியே. வீண் ஆசை பிடித்து அலைபவர்கள் கஷ்டத்தையே அனுபவிக்கிறார்கள். அவமானப்படுகிறார்கள். ஆனால் இந்த விஷயம் அவர்களுக்குக் காலம் கடந்து போன பிறகுதானே தெரிகிறது" என்றான்.

மகாலோபியே "நான் உன்னை முன் கூட்டியே எச்சரித்தேனே. நீயோ ஆலாபனை செய்த கழுதையின் கதை போல என் பேச்சைக் கேட்கவில்லை" எனக் கூறிக் கதையைச் சொல்லலானான்.

ஒரு காலத்தில் உதத்தன் என்ற கழுதை இருந்தது. அது பகல் வேளைகளில் தன் எஜமானனான வண்ணானிடம் வேலை செய்துவிட்டு இரவு வேளைகளில் சுயேச்சையாகத் திரியும். அப்படித் திரிகையில் அது ஒரு நரியுடன் நட்புக் கொண்டது. அவை இரண்டும் வெள்ளரித் தோட்டத்தில் நுழைந்து வெள்ளரிக்காய்களைத் திருடித் தின்று வரலாயின.

ஒரு நாள் இரவு கழுதை தன் வயிறு புடைக்க வெள்ளரிக்காய்களைச் சாப்பிட்டுவிட்டுத் தன் நண்பனான நரியிடம் "நண்பா, இந்தப் பால் போலப் பொழியும் நிலவைக் கண்டு என் மனம் எவ்வளவு சந்தோஷப்படுகிறது! நான் இப்போது பாடப் போகிறேன். என் ராக ஆலாபனை எப்படி இருக்கும் தெரியுமா?" என்று கேட்டது.

நரியோ "அப்பனே, நாமோ திருட்டுத்தனமாக இங்கு வந்து யார் கண்ணிலும் படாமல் வெள்ளரிக் காய்களைப் பறித்துச் சாப்பிடுகிறோம். உன் சங்கீதத்தைப் பற்றி நீ எவ்வளவு உயர்வாக

Compose Mail - Yahoo! Mail In | Chandamama:Indian children's
www.chandamama.com//archive/PdfFlip.php?lang=tamil&yr=1980&mnth=2&adOpt=0 - Google Chrome
www.chandamama.com//archive/PdfFlip.php?lang=tamil&yr=1980&mnth=2&adOpt=0
Fullscreen | Exit | 10 / 72

நினைத்துக் கொண்டாலும் அது எப்படிப்பட்டது என்பது எனக்குத் தெரியும். அதை யாராலும் ரசிக்க முடியாது. காட்டுக் கூச்சலாக அது இருக்கும். அதைக் கேட்டு தோட்டக் காவல்காரர்கள் விழித்து எழுந்து வந்து உன்னைப் பிடித்து அடித்து நொறுக்கி விடுவார்கள். எனவே நான் சொல்வதைக் கேள். நீ பாடாதே. பேசாமல் வெள்ளரிக் காய்களைத் தின்று விட்டுப் போ'' என்றது.

கழுதையோ ''நீ காட்டில் இருப்பவன். உனக்கு சங்கீதம் என்றால் என்ன தெரியும்? இசை புனிதமானது. அதைக் கேட்டவன் மெய் மறப்பான்'' என்றது. நரியோ ''இதெல்லாம் சரியே. ஆனால் நீ பாடினால் கேட்க சகிக்காதே. அதனால் நாம் வந்த வேலைதான் கெடும்'' என்றது.

கழுதையோ ''அதெனை என் இசை ஞானத்தைப் பழிக்கிறாய்? இசையைக் கரை கண்டவன் நான். ஸ்வரங்கள் ஏழு. ஸ்தாயிகள் மூன்று. ராகங்களோ ஏராளமானவை. வேதங்களுக்கு அடுத்தபடியாக உயர்ந்தது சங்கீதமே. ராவணன் தன் நரம்புகளை எடுத்து வீணைக் கம்பிகளாகக் கட்டி இன்ப நாதம் எழுப்பி சிவபிரானையே மகிழவைத்தான். எனவே எனக்கு சங்கீதம் வராது என்று நீ எப்படிக் கூறலாம்? இவ்வளவு விஷயங்களை நான் தெரிந்து வைத்திருக்கிறேன் பார்'' என்றது.

நரியோ ''இவ்வளவு தெரிந்தும் உனக்குக் குரல் இல்லையே. நீ பாடினால் ஊரில் ரகளை ஏற்படும். எனவே நீ இப்போது பாடுவதாக இருந்தால் நான் முதலில் இங்கிருந்து போய் விடுகிறேன். பிறகு நீ பாடு'' எனக் கூறி அத் தோட்டத்திலிருந்து வெளியே போய் விட்டது.

கழுதையோ ''நீ போ. நான் தோடிராக ஆலாபனை செய்கிறேன் பார்'' எனக் கூறித் தன் குரலால் காள் காள் என்று கத்த ஆரம்பித்தது. அதைக் கேட்ட தோட்டக்

காவல்காரன் தடியோடு வந்து கழுதையை அடி அடி என்று அடித்துக் கீழே தள்ளினான். அவன் அதன் கழுத்தில் ஒரு பெரிய கல்லையும் கட்டி விட்டு இன்னும் ஏதாவது பிராணி தோட்டத்திற்குள் வந்துவிடப் போகிறதே என எண்ணி அங்கேயே படுத்துத் தூங்கினான்.

சற்று நேரத்திற்குப் பின் தன் நினைவைப் பெற்று எழுந்த கழுதை அந்தத் தோட்டத்திலிருந்து மெதுவாகத் தப்பி ஓடியது. நரி தன் நண்பன் வருவதைக் கண்டு ''நான் சொன்னதைக் கேட்டாயா? உன் சங்கீதத்திற்கு என்ன பரிசு கிடைத்தது பார்'' என்றது. கழுதையும் முகத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டது.

இந்தக் கதையைக் கேட்ட மாபெரும் உலோபி ''உண்மை. தன் நண்பன் கூறும் நல்லுரைகளைக் கேட்க வேண்டும். இல்லா விட்டால் அவஸ்தைப்பட வேண்டியது தான். ஆனால் கற்பனையில் மூழ்கினவன் கண்கள் மறைக்கப்பட்டுத் தானே இருக்கும். இதற்கு உதாரணமாக ஒரு அந்தண வாலிபனின் கதையைக் கூறுகிறேன்'' என்று கூறிக் கதை சொல்லலானான்.

ஒரு ஊரில் பாவகிருபணன் என்ற அந்தண வாலிபன் இருந்தான். அவன் ஒரு ஊரில் நடந்த

சமாராதனையில் நன்கு சாப்பிட்டு விட்டு அங்கு அவர்கள் ஒரு பானை நிறையப் போட்டுக் கொடுத்த வெல்ல நெய்மாவை மூட்டையாகக் கட்டி எடுத்துக் கொண்டு தன் ஊருக்குத் திரும்பி வரலானான்.

வழியில் அவன் ஒரு ஆல மரத்தின் நிழலில் தங்கினான். நல்ல காற்று வீசவே அவன் தன் பானையை மரக்கிளையில் கட்டித் தொங்க விட்டு கீழே படுத்துக் கண் மூடினான். சற்று நேரத்தில் அவன் இவ்வாறு எண்ணமிடலானான்.

''இந்த ஊரில் பஞ்சம் வரலாம். அப்போது இந்தப் பானையிலுள்ள

start | Compose Mail - Yaho... | www.chandamama.c... | My Pictures | 5 - Paint | 9:32 AM

வெல்ல மாவை நூறு ரூபாய்களுக்கு விற்பேன். அதைக் கொண்டு இரண்டு ஆடுகள் வாங்குவேன். சில மாதங்களில் அவை குட்டிகள் போட அவற்றை விற்பேன். அந்தப் பணத்தைக் கொண்டு இரண்டு பசுக்களை வாங்குவேன். அவை கொஞ்ச காலத்திற்குப் பிறகு கன்றுகளைப் போடும். அக் கன்றுகளை விற்று எருமை மாடுகளை வாங்குவேன். அவை எருமைக் கன்றுகளைப் போட அவற்றை விற்றுக் குதிரைகள் வாங்குவேன். அவை குதிரைக் குட்டிகளைப் போட அவற்றை விற்று நிறையப் பணம் வைத்துக் கொண்டு பெரிய மாளிகையைக் கட்டுவேன். என் அழகையும் பணத்தையும் கண்டு அப்போது ஒரு பிராம்மணன் தன் அழகிய மகளை எனக்குக் கல்யாணம் செய்து வைப்பான். கல்யாணமான மறு வருடம் என் மனைவி ஒரு ஆண் குழந்தையைப் பெற்றெடுப்பாள். அவனைப் வளர்த்து வருவேன். நான் ஒரு புத்தகத்தை எடுத்துக் கொண்டு குதிரை லாயத்திற்கு பக்கம் உட்கார்ந்திருப்பேன். அப்போது என் மகன் என்னிடம் ஏதோ கேட்க ஓடி வருவான். நான் உடனே என் மனைவியிடம் "குழந்தையைப் பிடி. குதிரை உதைத்து விடப் போகிறது" என்று கத்துவேன். அவள் அப்போது வீட்டு வேலைகளில் ஈடுபட்டிருப்பாள். நான் சொன்னதைக் கேட்காமல் இருந்து விடுவாள். எனக்குக் கோபம் வந்து தடியால் அவளை இப்படித்தான் அடிப்பேன்" எனக் கூறித் தன் தடியை எடுத்து மாக்கிளையில் கட்டித் தொங்க விட்டிருந்த பானையை அடித்தான். பானை சுக்கு நூறாக உடைந்தது அதிலிருந்த வெல்ல மாவும் சிதறித் தரை மீதும் அவன் மீதும் விழுந்தது.

அதோடு அவன் கட்டிய மனக் கோட்டையும் இடிந்து விழுந்தது.



தாஜகக் கரடிராயன்

19

[சந்திரபுரியின் மன்னன் மாயக் குரங்கின் மந்திரக் கோலைக் கொண்டு வந்து கொடுப்பவருக்குத் தான் கனிகாரம் எடுத்துக் கொள்ளப் போகும் பெண்ணை மணம் செய்து வைத்து பாதி நாட்டையும் அளிப்பதாக அறிவித்தான். புஜகுராயனுடன மாயக் குரங்கு கோட்டை மதில் மீது ஏறி வருவதை காட்டு வாசி பார்த்து அம்பால் அடித்தான். புஜகுராயன் அதைப் பிடித்து மாமணியும் கரடிராயனும் இருந்த பக்கம் எறிந்தான். பிறகு—)

அம்பால் அடிபட்டு முன் புஜகுராயன் தனது மந்திரக் கோல் எங்கே என்று கத்தியது கரடிராயன் காதிலும் மாமணியின் காதிலும் விழுந்தது. கரடிராயன் அப்போது "இந்தப் புஜகுராயனிடம் இருந்த மந்திரக் கோலை யாரோ திருடிக் கொண்டு போய் விட்டாரா அல்லது இவனே அதை எங்காவது தொலைத்து விட்டானா?" என்று கூறினான். மாமணியும் "அந்த மந்திரக் கோல் இப்போது யாரிடம் இருக்கிறது என எப்படிக் கண்டு பிடிப்பது? இந்தக் கோட்டைக்குள் செல்லவும் முடியாது போலிருக்கிறதே. உதயபுர மன்னனின் கோட்டைக் கதவு மரத்தால் ஆனதால் எரித்தோம். இதுவோ இரும்புக் கதவாயிற்றே" என்றான்.

கரடிராயன் தன் உறையிலிருந்து வாளை உருவிக் கொண்டு "இன்றிரவு நாம் கோட்டைக்கு வெளியே எங்காவது கூடாரம் போட்டுக் கொண்டு இருக்க வேண்டியது தான். கோட்டைக்குள் நானை எப்படிப் போவது என்பது பற்றி நிதானமாக யோசிப்போம்" என்றான்.

அப்போது உலக்கைராயன் தன் கதையை எடுத்துக் காட்டி "இது எதற்கு இருக்கிறது? இந்தக் கோட்டையின் மதில் சுவரை உடைக்கத்தானே" எனக் கூறியவாறே வேகமாக ஓடிக் கோட்டை மதில் மீது கதையால் ஒரு அடி அடித்தான். அந்த அடியால் மதில் சுவரின் ஓரிரண்டு கற்கள் பெயர்ந்து கீழே விழுந்தன. மதில் மீதிருந்த வீரர்கள் உலக்கைராயன் கோட்டை மதிலைத் தாக்குவதைக் கண்டார்கள். எனவே அவர்கள் கோபம் கொண்டு அவன் மீது அம்புகளை எய்யலானார்கள்.

கரடிராயன் உலக்கைராயனை தன்னருகே அழைத்து "நாம் சற்று ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்" என்றான். பிறகு அவன் "மாமணி! என் மந்திரக் கோல் என்ன ஆயிற்று என்று தெரிந்து கொள்ள வேண்டும்" என்றான்.

இதே சமயம் கரடிவித்தை பார்த்த கூட்டத்திலிருந்த இரு சீடர்களும் தாம் எடுத்த மந்திரக் கோலுடன் தமது குருவைக் காண கோட்டைக்கு வெளியே அந்த காவிக்கார குரு இருந்த மரத்தடிக்கு வந்து சேர்ந்தார்கள்.

அந்த சீடர்களில் பெரியவன் தன் கையில் மந்திரக் கோலை எடுத்துக் கொண்டு "தம்பி! இதை நம் குருவிடம் கொடுக்குமுன் இதன் சக்தியை நாம் பரிசோதித்துப் பார்க்கலாம்" என்றான். சின்னச் சீடனும் தலையை ஆட்டவே பெரிய சீடன் ஏதேதோ மந்திரங்களை உரக்க உச்சரித்து "புதையல் இருக்கும் இடத்திற்குப் போக வழி செய்" எனக் கூறியவாறே தரை மீது மந்திரக் கோலை ஓங்கி அடித்தான்.

அப்போது மரத்தடியே இருந்த காவிக் குரு "அடே! யாரடா தப்புத்தப்பாக மந்திரங்களைச் சொல்வது? இங்கே நான் இருப்பது தெரியவில்லையா?" எனக் கூறியவாறே தன் கைத் தடியை எடுத்து ஆட்டினான்.

அது கேட்டு சீடர்கள் இருவரும் திகைத்தார்கள். அவர்கள் அடித்த இடத்தில் ஒரு துவாரம் ஏற்பட்டு அதன் வழியாக நீர் பீறிட்டுக் கொண்டு உயரக் கிளம்பி விழலாயிற்று. காவிக் குரு இதனைக் கண்டு பற்களை 'நற' 'நற' வென்று கடித்தார். நீரோ அவர் மீது விழலாயிற்று.

அவர் சட்டெனத் துள்ளிக் குதித்து சற்று தூரத்தில் நின்று தன் இரு சீடர்களையும் பார்த்து "சீடர்களே! பார்த்தீர்களா அதிசயத்தை! இடியோ மின்னலோ மேகமோ இல்லாமல் தண்ணீர் மழை போலப் பெய்கிறதே" என்றார்.

அப்போது அந்த சீடர்கள் "குருவே! எம் மந்திர சக்தியால் பூமிக்குள் இருந்து இப்படித் தண்ணீர் வரச் செய்தோம்" என்றார்கள். அப்போது காவிக் குரு தன் சீடர்களை உற்றுப் பார்த்தார். பெரிய சீடன் கையில் மந்திரக் கோல் ஒன்று இருப்பது கண்டு "அடே! அது என்ன? மந்திரக் கோலா? என்னிடம் காட்டவே

8 - Paint
www.chandamama.com//archive/PdfFlip.php?lang=tamil&yr=1980&mnth=2&adOpt=0 - Google Chrome
www.chandamama.com//archive/PdfFlip.php?lang=tamil&yr=1980&mnth=2&adOpt=0
Fullscreen Exit 16 / 72

இல்லையே. கொண்டு வாருங்கள் பார்க்கலாம்" என்று கேட்டார்.

பெரிய சீடனும் "ஆமாம். மந்திரங்களைக் கூறி இதனைத் தரை மீது அடித்து புதையல் உள்ள இடத்திற்கு போக வழி செய்யச் சொன்னேன். இது இப்படித் தண்ணீரைக் கொட்ட வைத்திருக்கிறது" என்றான்.

அப்போது காவிக் குரு அவர்களருகே வந்து பெரிய சீடனின் கையிலிருந்த மந்திரக் கோலை வாங்கித் திருப்பித் திருப்பிப் பார்த்தார். பிறகு அவர் "இது யாரோ ஒரு மந்திரவாதியிடம் வெகு காலம் இருந்திருக்கிறது. இது உனக்கு எப்படிக் கிடைத்தது? இது கிடைத்ததுமே என்னிடம் கொண்டு வந்து கொடுத்திருக்க வேண்டாமோ?" என்று பெரிய சீடனிடம் கேட்டார்.

பெரிய சீடன் சட்டெனத் தன் குருவிடம் இருந்து தான் கொடுத்த மந்திரக் கோலைப் பிடுங்கிக் கொண்டு "முதலில் இந்த நீர் ஊற்றை மேலும் பொங்காமல் அடக்க வேண்டும். இல்லா விட்டால் இங்கே நீர் பெருகி நம்மையே மூழ்க அடித்து விடும்" எனக் கூறி "இதன் வாயை மூடு" என அந்த மந்திரக் கோலால் அடித்தான்.

அப்போது தரை 'படார்' என்று பிளந்தது. அங்கு ஒரு மனிதன் புகுந்து போகும் அளவிற்கு துவாரம் ஏற்பட்டது. அதைக் கண்ட காவிக் குரு "சீடர்களே! பேஷ்!! எனக்கு அருமையான ஒரு மந்திரக் கோலைக் காணிக்கையாகக் கொடுக்கப் போகிறீர்கள்! ஆகா! புதையல் இருக்கும் இடத்திற்குப் போக வழி ஏற்பட்டு விட்டது. உள்ளே போய் என்ன இருக்கிறது என்று பார்த்து வாருங்கள்" என்றார்.

சின்னச் சீடன் அந்த மந்திரக் கோலைப் பார்த்து ஏதோ சந்தேகப் படுபவன் போல "குருவே! இந்த மந்திரக் கோலை நம்ப முடியாது. நாம் ஒன்று சொன்னால் இது

ஏதோ ஒன்றைச் செய்கிறது. புதையலுக்கு வழி காட்டச் சொன்னால் தண்ணீர் வரச் செய்தது. அதனால் இதை நம்பிப் புதையல் கிடைக்கும் என்று இந்தக் குழிக்குள் இறங்கக் கூடாது" என்றான்.

காவிக்குருவும் ஏதோ சந்தேகப் பட்டவர் போல பெரிய சீடனிடம் இருந்து மறுபடியும் மந்திரக் கோலை வாங்கி உற்றுப் பார்க்கலானார். அப்போது பெரிய சீடன் "ஏன் இந்தச் சந்தேகம்? இதனை நான் மாயக் குரங்கான புஜங்ராயனிடமிருந்து எடுத்து வந்தேன். அவன் இப்போது சந்திரபுர முதலமைச்சன். இந்த மந்திரக் கோலைக் கொண்டு வருபவர்களுக்கு அரசன் தன் சுவீகாரப் பெண்ணைக் கல்யாணம் செய்து வைத்துப் பாதி நாட்டையும் கொடுப்பதாக வாக்களித்திருக்கிறான்" என்றான்.

அதைக் கேட்ட காவிக்குரு "என்னடா சீடா! இதை முதலில் சொல்லித் தொலைத்திருக்கக் கூடாதா? நீ வேண்டுமானால் பெண்ணைக் கல்யாணம் செய்து கொள். உன் குருவான எனக்குப் பாதி நாட்டைக் கொடுத்து விடு. ஆனால் ஒன்று. இதோ பார். இந்த அரசர்கள் சொல்வதை நம்பி விடக் கூடாது. உன்னிடம் உள்ள

இந்த மந்திரக் கோலை அவன் வாங்கிக் கொண்ட பின் தான் சொன்னபடி நடக்காமல் உன் தலையையே அவன் வெட்டி எறிந்து விட்டால் யாரால் என்ன செய்ய முடியும்?" என்றான்.

சீடர்களும் "ஆமாம் குருவே, நீங்கள் சொல்வது சரி" என்றார்கள். அப்போது சின்னச் சீடன் "குரு, இந்தப் பள்ளத்தில் படிக்கட்டுகள் உள்ளன. நாம் மூவரும் இறங்கிப் போய்த்தான் பார்ப்போமே. ஒரு வேளை புதையல் கிடைத்தாலும் கிடைக்கலாம்" என்றான்.

காவிக்குருவும் "சரி. நமக்கு அதிர்ஷ்டம் இருந்து புதையல்

9 - Paint
www.chandamama.com//archive/PdfFlip.php?lang=tamil&yr=1980&mnth=2&adOpt=0 - Google Chrome
www.chandamama.com//archive/PdfFlip.php?lang=tamil&yr=1980&mnth=2&adOpt=0
Fullscreen Exit 18 / 72



கிடைத்தால் கிடைத்ததே போதும் என்று திருப்திப்படலாம். மந்திரக் கோலை அரசனிடம் கொடுக்கலாமா அல்லது வேண்டாமா என்பது பற்றிப் பிறகு யோசிக்கலாம்'' என்றார்.

மூவரும் பூமிக்குள் தென்பட்ட படிக்கட்டுகள் வழியே இறங்கிச் செல்லலானார்கள். கொஞ்ச தூரம் போனதும் கீழே தண்ணீர் முழங்கால் ஆழத்திற்கு இருந்தது. அதில் கொஞ்ச தூரம் அவர்கள் நடந்து சென்ற போது சற்று தூரத்தில் ஏதோ 'மினுக்' 'மினுக்' கென்று ஒளி வருவதைக் கண்டார்கள். காலிக்குரு தன் சீடர்களிடம் ''அதோ பாருங்கள் 'பளிச்' 'பளிச்' சென்று நவரத்தினங்கள் மின்னுவதை. சந்தேகமே இல்லை. அங்கே தன் புதையல் இருக்கிறது. ஆனால் அந்த புதையலை யாராவது யட்சனோ கந்தர்வனோ அல்லது ராட்சசனோ காவல் காத்து நின்றால் நாம் என்ன செய்வது? நம்மால் அவர்களை எதிர்க்க முடியுமா? யோசித்துப் பாருங்கள் நன்றாக'' என்றார்.

பெரிய சீடனும் ''குருவே, நீங்கள் தாம் அதிக சக்தி வாய்ந்தவர். எனவே அதற்கு ஏதாவது ஒரு வழி நீங்களே கண்டு பிடியுங்கள்'' என்றான்.

அப்போது சின்னச் சீடன் பெரிய சீடனிடம் ''என்னடா நீ இப்படி மண்டூகமாய் இருக்கிறாய்? இவ்வளவு சக்தி வாய்ந்த மந்திரக் கோல் நம்மிடம் இருக்கும் போது யார் காவலாக இருந்தால் தான் என்ன? இதனால் ஒரு தட்டு தட்டினால் அவன் 'பொத்' தென்று தன்னால் விழுகிறான்! இது கூடத் தெரியவில்லையா?'' என்றான்.

காலிக் குருவும் ''பேஷ்! சீடன் என்றால் நீதான் என் பிரதம சீடன். என்ன அறிவு! என்ன யோசனை! உனக்குச் சமமாக யார் இருக்கிறார்கள்? சரி நாம் இன்னும் முன்னே செல்லலாம்'' என்றார் மூவரும் நடந்து சென்றார்கள். அப்போது அவர்கள் தம் தலைக்கு மேலுள்ள

நிலப் பகுதி அதிர்வது போல உணர்ந்தார்கள். எங்கிருந்தோ ஒரு யானை பிளிறிடும் சத்தமும் அவர்களின் காதில் விழுந்தது.

காலிக் குரு சட்டென நின்று ''அடடே, இதென்ன நம் ரகசியத்தை யாரோ சிலர் அறிந்து வந்து கொண்டிருக்கிறார்கள் போலிருக்கிறது. அவர்களிடம் யானைகளும் இருக்கின்றன போலும். அவர்கள் வந்து நம்மைத் தாக்கினாலும் தாக்கலாம்'' என்றார்.

பெரிய சீடனும் ''குருவே'' என ஆரம்பிக்கும் போதே சின்னச் சீடன் பேச விடாமல் மடக்கி விட்டு ''நீங்கள் எப்போது பார்த்தாலும் எதையாவது கற்பனை செய்கிறீர்கள். யட்சன் என்கிறீர்கள் ராட்சஸன் என்கிறீர்கள். வீரர்கள் யானைப் படை என்றெல்லாம் சொல்லி இல்லாத பயத்தைக் காட்டுகிறீர்கள். இப்போது நாம் எது பற்றியும் எண்ணாமல் புதையலைப் பற்றியே நினைத்துக் கொண்டு போவோம்'' என்றான்.

இதே சமயம் மேலே இருந்து மண் சரிந்து 'பொத்' பொத்தென்று அவர்கள் முன் விழலாயிற்று. குருவும் சீடர்களும் பயந்து ஓடலானார்கள்.

அந்த சுரங்கப் பாதை ஒரு குளக்கரையில் போய் முடிந்தது. அங்கு

தான் கூடாரம் போட்ட இடம் தேடியவாறே யானை மீது அமர்ந்து கரடி மனிதனும் காட்டு மனிதனும் வந்து கொண்டிருந்தார்கள். அவர்கள் அமர்ந்திருந்த யானையின் கால் சுரங்கப் பாதையின் மேல் பகுதியில் படவே மண் சரிந்து சுரங்கப் பாதைக்குள் விழலாயிற்று.

திடீரென பூமிக்குள் கால் இறங்கவே யானை பலமாகப் பிளிறிட்டது. அதன் முன் கால் மடங்கிக் கீழே விழவே அதன் மீதிருந்தக் கரடி மனிதனும் காட்டு மனிதனும் சட்டெனக் கீழே குதித்தார்கள். சற்று நேரத்திற்குப் பிறகு யானையும் மெதுவாகச் சமாளித்துக் கொண்டு பள்ளத்திலிருந்து

10 - Paint
www.chandamama.com//archive/PdfFlip.php?lang=tamil&yr=1980&mnth=2&adOpt=0 - Google Chrome
www.chandamama.com//archive/PdfFlip.php?lang=tamil&yr=1980&mnth=2&adOpt=0
Fullscreen Exit 20 / 72

எழுந்து மெதுவாக மேலே வந்தது. கரடி மனிதனும் அப்பகுதியை நன்கு பார்த்து விட்டுக் காட்டு மனிதனிடம் "இந்த இடத்தைக் கரடிராயரும், மாமணியும் ஒரு முறை பார்த்தால் நன்றாக இருக்கும். இங்கே தண்ணீருக்குப் பஞ்சம் இல்லை. சந்திரபுரக் கோட்டையும் இங்கே இருந்து மிகவும் அருகில் தான் உள்ளது. புஜங்கராயன் என்னதான் செய்தாலும் தன் குரங்குப் புத்தியை விடமாட்டான். அவனை நாம் இந்த விழுதுகளாலும் காட்டுக் கொடிகளாலும் கட்டி இழுத்துக் கொண்டு போய் கரடிராயரின் முன் நிறுத்தவும் முடியும்" என்றான்.

காட்டு மனிதன் கரடி மனிதன் கூறியதையெல்லாம் கேட்டுக் கொண்டதாகத் தெரியவில்லை. அவன் யானையின் கால் ஒடிந்து போய் விட்டதோ என்று பார்க்கலானான். பிறகு அந்த யானையை முன்னும் பின்னுமாக நடக்கச் செய்தான். அது எப்போதும் போல நடப்பது கண்டு அவன் திருப்தி அடைந்து "அப்பாடா! இதன் கால் ஒன்றும் ஒடிந்து போகவில்லை. நன்றாகத்தான் இருக்கிறது அந்த மட்டிற்கும் நமக்கு அதிர்ஷ்டமே" என்றான்.

அதே சமயம் ஒரு மரக் கிளையிலிருந்து இன்னொரு காட்டு மனிதன் குதித்தவாறே "உங்கள் யானை அந்தக் கபட சன்னியாசிகள் நுழைந்த சுரங்கப் பாதை மீது போகாதது உங்கள் அதிர்ஷ்டமே. இல்லாவிட்டால் நீங்களும் அந்த சுரங்கத்திற்குள் விழுந்து விட்டிருப்பீர்கள்" என்றான்.

அப்போது கரடி மனிதன் சட்டெனத் தன் கோடாலியை எடுத்துக் கொண்டு "அடே! நீ யார்? அந்த மாயக் குரங்கின் கை ஆளா? இங்கே என்ன செய்கிறாய்?" எனக் கூறியவாறே அவனை நோக்கிச் சென்றான்.

(தொடரும்)

தப்பிய பேர்வழி

தன் முயற்சியில் சற்றும் மனம் தளராத விக்கிரமன் மீண்டும் மரத்தின் மீதேறி அங்கு தொங்கும் உடலைக் கீழே வீழ்த்தினான். பின்னர் கீழே இறங்கி அதனைச் சுமந்து கொண்டு மயானத்தை நோக்கிச் செல்கையில் அதனுள் இருந்த வேதாளம் எள்ளி நகைத்து "மன்னனே! நீ நேர்மையுடன் நடக்கிறாய். ஆனால் நேர்மை தவறி நடப்பவர்கள் கூட யாருக்கும் அகப்படாமல் தப்பித்து விடுவதும் உண்டு. அதற்கு உனக்கு வெங்கடாத்திரி என்பவனின் கதையைக் கூறுகிறேன். கவனமாகக் கேள்" என்று கூறிக் கதை சொல்லலாயிற்று.

வெகு காலத்திற்கு முன் சில கிராமங்களின் ஜமீன்தாராக நாகப்பா என்பவர் இருந்தார். அவரிடம் வெங்கடாத்திரி என்ற

வேதாளம் சொல்லும் கதை

start Compose Mail - Yaho... www.chandamama.c... My Pictures 10 - Paint 9:33 AM

கணக்குப்பிள்ளை இருந்தான். அவன் திறமைமிக்கவன், நல்லவன். ஜமீன்தாரரின் நம்பிக்கைக்கும் பாத்திரமானவன். எனவே அவன் சொல்வதை ஜமீன்தாரர் தட்டி பேசவே மாட்டார்.

ஜமீனில் உள்ளவர்கள் ஏதாவது வேலையாக வேண்டுமென்றால் வெங்கடாத்திரியைக் கண்டு கும்பிடு போட்டு விஷயத்தைச் சொல்வார்கள். அவனும் உடனே ஜமீன்தாரரிடம் கூறி அவர்களுக்கு அனுகூலமாகச் செய்து கொடுப்பான். நாளடைவில் இப்படி, வருவோர் கூடைகளில் பழங்கள் கொண்டு வந்து வெங்கடாத்திரியிடம் கொடுத்துத் தம் வேலைகளை முடித்துக் கொள்ளலானார்கள். கொஞ்ச நாட்களில் பழங்களோடு பணத்தையும் வைத்துக் கொடுக்கலானார்கள். ஒரே வேலைக்குப் போட்டி போட்டுப் பலர் வரும்போது அதிகப் பணம் கொடுத்தவனையே வெங்கடாத்திரி கவனிக்கலானான்.

இதனால் வெங்கடாத்திரியின் மனைவியின் கழுத்திலும் கைகளிலும் தங்கநகைகள் ஏறின. வீட்டில் பல விலை உயர்ந்த பொருள்கள் நிரம்பின. வெங்கடாத்திரிக்கு லஞ்சம் கொடுத்தால் எல்லாம் சுலபமாக முடிந்து விடும் என்று மக்களிடையே ஒரு அபிப்பிராயம் ஏற்பட்டு விட்டது.

ஒரு முறை சுப்பன் என்பவன் ஜமீன் பள்ளிக் கூடத்தில் ஆசிரியர் வேலை காலியாக இருப்பது கேள்விப்பட்டான். அவன் ஒரு மனுவை எழுதிக் கொண்டு வந்து வெங்கடாத்திரியைக் கண்டு கும்பிடு போட்டு மனுவைக் கொடுத்தான். மற்றவர்கள் வெங்கடாத்திரிக்குக் கொடுப்பது போலக் கூடை நிறையப் பழமோ, பணமோ கொடுக்கவில்லை. வெங்கடாத்திரியோ தனக்குப் பணம் கொடுத்த ஒருவனைச் சிபார்சு செய்து அந்த ஆசிரியர் வேலையை அவனுக்கு வாங்கிக் கொடுத்து விட்டான்.

இதைக் கண்டு சுப்பன் ஆத்திரம் கொண்டு ஜமீன்தாரரிடம் போய் வெங்கடாத்திரி லஞ்சம் வாங்குபவன் என்றும் தான் லஞ்சம் கொடுக்க முடியாததால் தகுதி இருந்தும் தனக்கு ஆசிரியர் வேலை கொடுக்க அவன் சிபார்சு செய்யவில்லை என்பதையும் கூறினான். ஜமீன்தாரரும் அது பற்றி விசாரிப்பதாகக் கூறி அவனை அனுப்பி விட்டார்.

ஒரு கிராமத்துக் கோவில் அர்ச்சகர் வேலை காலியானது. அப்போது ஜமீன்தாரர் பிராம்மணர்த் தத்திற்கு மட்டும் போதும் ஒரு பிராம்மணனைக் கூப்பிட்டு "நீ இந்தக் கோவில் அர்ச்சகர் ஆகலாம். இந்தப் பணம் கொடுத்து வெங்கடாத்திரியைப் போய் வேலையை வாங்கிக் கொடுக்கும்படிக் கேள். அப்படி அவன் அந்த வேலையை வாங்கிக் கொடுத்தால் நீ உன் வாழ்நாளை நிம்மதியாகக் கழிக்கலாம்," எனக் கூறி அனுப்பினார். நன்கு மந்திரங்களைக் கற்று பூஜைகளை முறைப்படி செய்யத் தெரிந்த ஒரு அந்தணரையும் அதன் பிறகு அந்த ஜமீன்தாரர் வெங்கடாத்திரியிடம் அதே வேலையை வெறும் கும்பிடு மட்டும் போட்டுக் கேட்கும்படி சொல்லி அனுப்பினார்.

இருவரும் ஒரே சமயத்தில் வெங்கடாத்திரியைக் கண்டார்கள். பிராம்மணர்த்த பிராம்மணன் பணமுட்டையுடன் உட்

12 - Paint
www.chandamama.com//archive/PdfFlip.php?lang=tamil&yr=1980&mnth=2&adOpt=0 - Google Chrome
www.chandamama.com//archive/PdfFlip.php?lang=tamil&yr=1980&mnth=2&adOpt=0
Fullscreen Exit 24 / 72



காத்திருந்தான். மற்ற அந்தணரோ வெங்கடாத்திரிக்கு வெறும் கும்பிடு மட்டும் போட்டு விட்டு அமர்ந்தார். அவர் வெங்கடாத்திரியின் நண்பரே. அவர் வந்த காரணத்தைக் கேட்டு ''ஓ! உன் போன்றவனுக்கு இந்த வேலை கிடைக்கத்தான் வேண்டும். நீ நன்றாகப் படித்தவன். முறைப்படி வேதங்களை அத்தியயனம் செய்தவன். எனவே நான் சொல்கிறேன் ஜமீன்தாரிடம்'' என்று கூறினான்.

அப்போது பிராம்மணர்த்த பிராம்மணன் பணப்பையை வெங்கடாத்திரி முன் வைத்து தனக்கு அந்த வேலை கிடைக்கச் சிபாரிசு செய்யும்படிக் கூறினான். வெங்கடாத்திரியோ ''மந்திரம் கூடச் சொல்லத் தெரியாமல் இவசத் திற்கு போய் சாப்பிடும் உன்னால் பூஜை செய்ய முடியாது. போ போ'' எனக் கூறி பணப்பையோடு திருப்பி அனுப்பி விட்டான்.

வெங்கடாத்திரி வேதங்களைக் கற்ற தன் நண்பனையே அர்ச்சகர் வேலைக்கு சிபாரிசு செய்திருந்தான். அவன் மற்றவன் கொடுத்த பணத்தைத் தொடக் கூட இல்லை. இதைக் கண்ட ஜமீன்தாரர் வெங்கடாத்திரி நேர்மையானவன் என்னும் சுப்பன் கூறியது அபாண்டம் எனவும் முடிவு செய்தார்.

தன் முடிவை அவர் சுப்பனிடம் சொன்னதும் சுப்பன் ''ஐயா! நான் சொல்வது உண்மையே. இம்முறை அவர் எப்படியோ தப்பி விட்டார். நீங்களே சற்று யோசித்துப் பாருங்கள். லஞ்சம் வாங்காமல் எப்படி வெங்கடாத்திரியின் மனைவிக்கு இவ்வளவு தங்கநகைகள் வந்தன? வீட்டின் மேஜை, நாற்காலி, வெள்ளிப் பாத்திரங்கள் என்றெல்லாம் எப்படிக் கிடைத்தன? இதையாவது விசாரியுங்கள். உண்மை தெரியும்'' என்று கூறினார்.

ஜமீன்தாரர் ''அதையும் விசாரிக்கிறேன்'' எனக் கூறி சுப்பனை

அனுப்பி விட்டார். இரண்டொரு நாட்களுக்கு பிறகு திடீரென ஜமீன்தாரர் வெங்கடாத்திரியின் வீட்டிற்கு விஜயம் செய்தார். அன்றுதான் வெங்கடாத்திரியின் மைத்துனன் அவசரமாகப் பெருந் தொகை வேண்டுமென்று கூறி அவனிடம் உதவி கேட்டான். வெங்கடாத்திரியும் தன்னிடம் அவ்வளவுப் பணம் இல்லை என்று தன் மனைவியின் நகைகளை வாங்கித் தருவதாகவும் அதனை அடகு வைத்துப் பணம் பெற்றுப் பிறகு அதை மீட்டித் தர வேண்டும் எனக் கூறினான். அவனது மைத்துனனும் அப்படியே செய்வதாகக் கூறி வெங்கடாத்திரியின் மனைவியின் நகைகளை வாங்கிக் கொண்டு அடகு வைக்கப் போயிருந்தான். வெங்கடாத்திரியின் வீட்டிலிருந்த மேஜை நாற்காலிகளையும் வெள்ளிப் பாத்திரங்களையும் தம் வீட்டு விசேஷத்திற்காக அடுத்த வீட்டுக்காரர் அன்றுதான் இரவல் வாங்கிப் போயிருந்தார்.

திடீரென ஜமீன்தாரர் வந்ததும் வெங்கடாத்திரி ஒரு பாயை எடுத்து விரித்து அவரை உட்கார வைத்தான். அவர் குடிக்கத் தண்ணீர் கேட்ட போதும் வெங்கடாத்திரியின் மனைவி ஒரு பித்தளை டம்ளரில் தண்ணீர் கொண்டு வந்து கொடுத்தாள். அப்போது ஜமீன்தாரர் அவளது கழுத்திலும் கைகளிலும் எவ்வித நகையும் இல்லாததையும் கவனித்தார். வெங்

start Compose Mail - Yaho... www.chandamama.c... My Pictures 12 - Paint 9:33 AM

13 - Paint
www.chandamama.com//archive/PdfFlip.php?lang=tamil&yr=1980&mnth=2&adOpt=0 - Google Chrome
www.chandamama.com//archive/PdfFlip.php?lang=tamil&yr=1980&mnth=2&adOpt=0
Fullscreen Exit 26 / 72

கடாத்திரி சாதாரண ஏழை போல வாழ்க்கை நடத்துவது கண்டு சுப்பன் சொன்னது பொய் என எண்ணிக் கொண்டு திரும்பிப் போனார். அவர் திரும்பும் போது வெங்கடாத்திரி அன்று வசூலான பணத்தையும் கணக்கோடு ஜமீன்தாரரிடம் ஒப்படைத்தான்.

ஜமீன்தாரர் சுப்பனை அழைத்து "நானே நேரில் பார்த்து விட்டேன். வெங்கடாத்திரி அநியாயமாக எதுவும் சம்பாதிக்கவில்லை. அவனும் எளிய வாழ்க்கையே நடத்துகிறான். இனியும் இப்படி வீண் புரளிகளைக் கிளப்பாதே" என்று கூறி அனுப்பினார். சுப்பனும் "இந்த வெங்கடாத்திரியின் அதிர்ஷ்டம் தான் என்ன! இரண்டு முறைகளில் ஜமீன்தாரர் பரீட்சித்துப் பார்த்த போதும் பயல் தப்பி விட்டானே! இதைத் தான் விதியின் திருவிளையாடல் என்பது" என எண்ணிக் கொண்டு சென்றான்.

வேதாளம் இந்தக் கதையைக் கூறி "இப்படி அதிர்ஷ்ட வசத்தால் இரு முறைகளிலும் தப்பிய வெங்கடாத்திரி தண்டிக்கத் தகாதவன் என ஆகி விட முடியுமா? அவனை முழுவதும் நம்பிய ஜமீன்தாரர் புத்திசாலியா? இந்தக் கேள்விகளுக்கு பதில் தெரிந்திருந்தும் நீ கூறா விட்டால் உன் தலை வெடித்துச் சுக்கு நூறாகி விடும்" என்றது.

விக்கிரமனும் "வேலைகளுக்கு வெங்கடாத்திரி சிபார்சு செய்த விதம் சரியானது எனக் கூற முடியாது தான். ஆனால் நேர்மையற்றது என்பதை இருவகைகளாகப் பிரிக்கலாம். சிலர் சுயநலத்திற்காகவே சமூகக் கட்டுப்பாடுகளை மீறி நேர்மையற்ற முறையில் நடந்து கொள்கிறார்கள். இப்படிப் பட்டவர்களை சமுதாயமே தண்டித்து விடும். வெங்கடாத்திரியின் குணத்தை சமுதாயம் தானே தன் போக்கில் இழுத்தது? மக்கள் அதிகாரிகளுக்குப் பரிசுகள் அளிப்பதில் தவறு இல்லை. ஆனால் பரிசுகள் குறிப்பிட்ட நோக்கத்தோடு அளிக்கப்படும் போது தான் அது நேர்மையற்றதாகிறது. பரிசுகளைப் பெற்றவன் பதிலுக்கு உதவ விருப்பத்தானே செய்வான்! வெங்கடாத்திரி யாரையும் பணம் கொடு என வற்புறுத்தியதே இல்லை. அவர்களாகப் பணம் கொடுத்தார்கள். எனவே பரிசுகளை ஏற்ற அவன் பதிலுக்கு உபகாரம் செய்தான் எனக் கொள்ளலாம். வெங்கடாத்திரி பிறருக்கு உதவும் மனப்பான்மை கொண்டவன். யாரையும் பணம் கொடுக்க வற்புறுத்தவில்லை. தன் மைத்துனன் வந்து பெருந் தொகை வேண்டும் எனக் கேட்டபோது அவன் தன் மனைவியின் நகைகளை எல்லாம் கொடுத்து அடகு வைத்துப் பணம் பெற்றுக் கொள்ள அனுப்பினான். அடுத்த வீட்டுக்காரர் மேஜை நாற்காலி, வெள்ளிப் பாத்திரங்கள் இரவல் கேட்ட போது தயங்காமல் கொடுத்தான். எனவே அவன் மனம் நல்லதே. ஜமீன்தாரரும் அறிவாளியே. வெங்கடாத்திரியின் மீது புகார் செய்யப்பட்ட போது இரு முறை அவர் அவனைப் பரீட்சித்துப் பார்த்தார். அவன் லஞ்சம் வாங்குகிறான் என்பதற்கு ஒரு தடயமும் கிடைக்கவில்லை. ஏன், சுப்பனிடம் கூட வெங்கடாத்திரி பணம் கொடுத்தால்தான் உத்தியோகம் வாங்கித் தருவதாகக் கூறவில்லை. எனவே வெங்கடாத்திரி மிகவும் நேர்மையானவன் என்றும் லஞ்சம் வாங்குபவன் அல்ல என்று இருந்து ஜமீன்தாரரின் நம்பிக்கைக்குப் பாத்திரமாக இருந்து வந்ததில் ஆச்சரியமே இல்லை" என்று கூறினான்.

விக்கிரமனின் சரியான இந்த பதிலால் அவனது மௌனம் கலையவே அவன் சுமந்து வந்த உடலோடு வேதாளம் உயரக் கிளம்பி மீண்டும் முருங்க மரத்தில் ஏறிக் கொண்டது.

start Compose Mail - Yaho... www.chandamama.c... My Pictures 13 - Paint 9:34 AM

www.chandamama.com//archive/PdfFlip.php?lang=tamil&yr=1980&mnth=2&adOpt=0 - Google Chrome
Fullscreen Exit 28 / 72

கனவுகள் பலித்தன!

குப்பணன் மகாக் கருமி. யாருக்கும் தருமம் என்று எதுவும் அவன் கொடுத்ததே இல்லை. ஒரு நாள் அவன் கனவில் "நீ நூறு ரூபாய் தானம் செய். உனக்கு ஆயிரம் ரூபாய் கிடைக்கும்" என்று ஒரு குரல் கூறியது.

அவனும் அதை நம்பி நூறு ரூபாய் தானம் செய்தான். அன்றே அவனது தூரத்து உறவினர் ஒருவர் இறந்ததால் அவரது ஆயிரம் ரூபாய் அவனுக்குக் கிடைத்தது. மற்றொரு முறை அவனது கனவில் "நீ ஆயிரம் ரூபாய் தானம் செய். உனக்குப் பத்தாயிரம் ரூபாய் கிடைக்கும்" என்று ஒரு குரல் கூறியது. மறு நாளே அவன் ஆயிரம் ரூபாய் தானம் செய்தான். அம்முறையும் அவனுக்கு யாரோ ஒரு கிழவி பத்தாயிரம் ரூபாயை விட்டு விட்டு இறந்து போனதாகத் தகவல் வந்தது.

சில நாட்களுக்குப் பிறகு அவனது மனைவியின் கனவில் "நீ பத்தாயிரம் ரூபாய் தானம் செய். உனக்கு லட்சம் ரூபாய் கிடைக்கும்" என்று ஒரு குரல் கூறியது. குப்பணனின் மனைவி அதைத் தன் கணவனிடம் கூற அவன் உடனே பத்தாயிரம் ரூபாய் தானம் செய்யுமாறு அவளிடம் சொன்னான். தானமும் நடந்தது.

மறு நாளே குப்பணன் திடீரென மாரடைப்பால் இறந்தான். அவனது லட்ச ரூபாய் சொத்து அவனது மனைவிக்கு கிடைத்தது. இப்படியாகக் கனவு பலித்தது!

பயில்வானின் படுதோல்வி

வெகு நாட்களுக்கு முன் பொரட்டூர் ஜமீன்தாரிடம் கட்டையய்யன் என்ற பயில்வான் இருந்தான். அவன் பார்ப்பதற்கே பயங்கரமாக இருந்தான். அவனோடு குஸ்தி போட்டவர்கள் எல்லாம் தோற்றே போனார்கள்.

இதனால் கட்டையய்யனுக்குத் தன்னை மிஞ்சிய பயில்வானே இல்லை என்ற மண்டைக் கர்வம் ஏற்பட்டு விட்டது. அவன் யாருக்கும் பயப்படவில்லை. அவனைக் கண்டு தான் எல்லோரும் பயப்பட்டார்கள்.

ஒரு நாள் இலந்தைப் பழம் விற்கும் இச்சக்காள் என்ற கிழவியின் கூடையிலிருந்து அவன் இலந்தைப் பழங்களை அள்ளிக் கொண்டதோடு கூடையையும் காலால் எட்டி உதைத்தான். கூடையில் இருந்த பழங்கள் தெருவில் சிதறி விழுந்தன.

இச்சக்காள் ஆத்திரத்தைப் பொறுக்கியவாறே "நீ உன் கை வரிசையை இந்தக் கிழவியிடம் காட்டி பெரிய சூரப்புலியாகி விட்டாயோ? எங்கள் ஊர் மலையனை உன்னால் குஸ்தி போட்டு ஜெயிக்க முடியுமா?" என்று கேட்டாள்.

கட்டையய்யனும் "மலையனா? யார் அவன்? சொல். நாளைக்கே அவனது பிணத்தை இந்த ஊர்த் தெருவில் கொண்டு வந்து போடுகிறேன். பார்" என்று கூறி மீசையை முறுக்கினான்.

கிழவியும் "மலையனும் நானும் இருப்பது புலியூரில். அங்கே ஒரு குழந்தை கூட அவன் இருப்பிடத்தைச் சொல்லும்" என்றாள்.

கட்டையய்யனும் "அப்படியா? நான் இப்போதே புலியூருக்குப் போய் அந்த மலையனை அடித்து

சமயபுரம் சண்முகம்

15 - Paint
www.chandamama.com//archive/PdfFlip.php?lang=tamil&yr=1980&mnth=2&adOpt=0 - Google Chrome
www.chandamama.com//archive/PdfFlip.php?lang=tamil&yr=1980&mnth=2&adOpt=0
Fullscreen Exit 30 / 72

நொறுக்கி மூட்டையாகக் கட்டிக் கொண்டு வருகிறேன்'' என்று கூறி வண்டியைக் கட்டிக் கொண்டு புலியூருக்குப் போனான்.

புலியூருக்குப் போய் கட்டையன் வண்டியிலிருந்து இறங்கினதுமே அவனைப் பார்த்தவர்களெல்லாம் பயந்து ஓடினார்கள். அவன் அவர்களைக் கூப்பிட்டும் யாரும் வரவில்லை. அப்பொழுது ஒரு கிழவன் தடி ஊன்றிக் கொண்டு வரவே அவனிடம் ''இந்த ஊரில் மலையன் என்றொருவன் எங்கே இருக்கிறான்?'' என்று கேட்டான்.

கிழவனும் ''மலையனா? ஊருக்கு வெளியே உள்ள காட்டில் ஆடு மேய்த்துக் கொண்டிருப்பான்'' என்றான். அப்போது கட்டையன் ''ஏய் கிழவா! நான் யாரென்று தெரியவில்லையா?'' என்று மீசையை முறுக்கியவாறே கேட்டான்.

கிழவனும் ''நீ யாரோ? எனக்குத் தெரியவில்லையே. நாம் எல்லாம் மனிதர்கள் தானே'' எனக் கூறிக் கொண்டே போனான்.

கட்டையனும் வண்டியை ஒரு ஓரமாக விட்டு மாட்டைக் கட்டிப் போட்டு விட்டு ஊருக்கு வெளியே உள்ள காட்டிற்குப் போனான். அங்கே ஒரு புளியமரத்தடியே ஒருவன் தடியால் மரக்கிளையைத் தட்டிப் புளியங்காய்களை உதிர்த்துக் கொண்டிருந்தான்.

கட்டையன் அவனைப் பார்த்து ''நீதான் மலையன் என்பவனா?'' என்று அலட்சியமாகக் கேட்டான். இதற்கு முன்பே கட்டையன் தன்னைத் தேடி வருகிறான் என்று தெரிந்து கொண்ட மலையன் வேண்டுமென்றே ''இல்லை. என் அண்ணன் தான் மலையன். உங்களைப் பார்த்தால் பயில்வான் போலிருக்கிறதே. என் அண்ணனிடம் ஏதாவது வேலையாக வந்தீர்களா?'' என்று கேட்டான்.

கட்டையனும் ''வேலையா! அவன் உடம்பை கொஞ்சம் பிடித்து விட்டுப் போகலாம் என்று வந்தேன்'' எனக் கூறி பயங்கர

மாகச் சிரித்தான். பிறகு புளியங் கொம்பு ஒன்றைப் பலமாக அவன் அடிக்க பொலபொலவென்று புளியங்காய்கள் விழுந்தன.

அது கண்டு மலையன் ''ஓ! என் அண்ணன் உங்கள் கால் தூசிக்குக் கூட வரமாட்டான் போலிருக்கிறதே. அடேயப்பா'' என்றான். கட்டையனும் ''அவன் எங்கே?'' என்று கேட்க மலையனும் ''அவன் வெளியூர் போயிருக்கிறான். நாளைக்குத்தான் வருவான். இதோ என் ஆடுகளைப் பட்டிக்குள் ஓட்டி விட்டு வருகிறேன். இன்று எங்கள் வீட்டில் நீங்கள் தங்கி சாப்பிடலாம்'' என்றான்.

பிறகு அவன் கட்டையனைத் தன் வீட்டிற்கு அழைத்துப் போனான். தன் தாயாரிடம் ''அம்மா! விருந்தாளி வந்திருக்கிறார். அவருக்கும் சேர்த்து சாதம் சமை'' என்றான். சமையலாகியது. இருவரும் சாப்பிட உட்கார்ந்தனர்.

கட்டையன் முகத்தைச் சுளித்தவாறே ''நான் தினமும் மாமிசம் சாப்பிடுவது. இன்று அரிசிச் சோறா?'' என்று கூறியவாறே ஒரு வாய் எடுத்துப் போட்டான். சாதம் வேகாமல் 'நறுக்' 'நறுக்'கென்று இருந்தது. சாதத்தில் ஒரே கல்மயம்.

அப்போது கட்டையன் ''இது என்ன சாதமா? கல்லா?'' என்று கேட்டான். மலையனும் ''நாம் என்ன பல் போன கிழவர்களா

start Compose Mail - Yaho... www.chandamama.c... My Pictures 15 - Paint 9:35 AM

16 - Paint
www.chandamama.com//archive/PdfFlip.php?lang=tamil&yr=1980&mnth=2&adOpt=0 - Google Chrome
Fullscreen Exit 32 / 72

'மெத்' 'மெத்'தென்று சாதம் சாப்பிட? இதை நன்றாக அரைத்து சாப்பிட்டு ஜீரணம் செய்ய முடியுமே" என்றான். கட்டைய்யன் பதில் பேசவில்லை. சாப்பிடா விட்டால் மானம் போகுமே எனக் கஷ்டப்பட்டு அதைச் சாப்பிடலானான்.

அவன் படும் அவஸ்தையைக் கண்டு மலையன் "அம்மா, கொஞ்சம் நல்லெண்ணெய் கொண்டு வா. சாதத்தில் விட்டு பிசைந்து சாப்பிடுகிறோம்" என்றான். கட்டையன் எண்ணெய் வரப் போகிறது என ஆவலுடன் எதிர்பார்த்தான். ஆனால் அவனது தாயார் எள்ளைக் கொண்டு வந்து இருவரின் இடது கைகளில் போட்டு விட்டுப் போனாள்.

மலையன் இடது கையால் எள்ளை நசுக்கி எண்ணெய் வரச் செய்து சாதத்தில் விட்டுப் பிசைந்தான். கட்டைய்யன் எள்ளை நசுக்கிப் பிழிந்தும் எண்ணெய் வரவில்லை.

அப்போது மலையன் "ஓ! எண்ணெய் வரும்படிப் பிழிய முடியவில்லையா?" எனக் கூறிக் கட்டையனின் இடது கையைப் பிடித்து கெட்டியாக அமுக்கினான்.

கட்டையனின் கை விரல் எலும்புகள் 'பட்' 'பட்'டென முறியும் சத்தம் கேட்டது. இடது கையிலிருந்து எண்ணெயோடு கொஞ்சம் ரத்தம் கூட வந்தது. ஒரே வலி. பல்லைக் கடித்துக் கொண்டு பொறுத்துக் கொண்டான். பிறகு "போதும் கையை விடு" என்றான். மலையனும் கையை விடவே கட்டைய்யன் சாப்பிட்டு எழுந்தான்.

கையைக் கழுவிக் கொண்டு 'இதோ வருகிறேன்' என்று கட்டைய்யன் கூறிப் போனவன் வண்டியைக் கட்டிக் கொண்டு ஊர் போய்ச் சேர்ந்தான். அவனது இடது கை விரல் எலும்புகள் பழையபடி சேர ஆறு மாதம் பிடித்தது. அவன் அதுவரை வெளியே தலை காட்டவில்லை.

உத்தமன்

உத்தானபாதனின் மகன் உத்தமன். இவனது தாய் சுருசி. துருவன் இவனது அண்ணன். ஆனால் உத்தானபாதன் நாட்டை உத்தமனுக்கே கொடுத்தான்.

உத்தமன் பகுலை என்பவளை மணம் புரிந்து கொண்டான். அவளோ அவனை சற்றும் லட்சியம் செய்யாமல் அவமதித்து வந்தாள். இதனால் கோபம் கொண்ட உத்தமன் அவளைக் காட்டில் கொண்டு போய் விட்டு வரும்படித் தன் வீரர்களுக்குக் கட்டளை இட்டான்.

காட்டில் விடப்பட்ட பகுலையை பாலபௌதன் என்ற நாகன் கண்டு அவளது அழகில் ஆசைப்பட்டு அவளைத் தன் வீட்டிற்குக் கவர்ந்து சென்றான். ஆனால் அந்த நாகனின் மகளான நந்தை தன் தாய்க்குப் போட்டியாக பகுலை தன் தந்தையின் மனைவி ஆகி விடுவாளோ எனப் பயந்து அவளை ஒரு ரகசியமான இடத்தில் மறைத்து வைத்துப் போஷித்தும் வந்தாள்.

கொஞ்ச காலம் ஆயிற்று. உத்தமனிடம் சுசர்மா என்ற அந்தணன் வந்து "என் மனைவியை யாரோ தூக்கிக் கொண்டு போய் விட்டார்கள். நீங்கள் கண்டு பிடித்துக் கொடுங்கள்" என வேண்டினான்.

உத்தமனும் சுசர்மாவின் மனைவியைத் தேடிக் காட்டில் வெகு தூரம் போய் திரிகாலஞ்ஞன் என்ற முனிவரின் ஆசிரமத்தை அடைந்தான். முனிவரும் உத்தமனிடம் அவன் வந்த காரணத்தைக் கேட்டார்.

உத்தமனும் தான் சுசர்மா என்ற அந்தணனின் மனைவியைத் தேடுவதாகக் கூறி "நீங்கள் ஏன் வழக்கமாகச் செய்யும் அர்க்கிய

மார்க்கண்டேய புராணக் கதை

start Compose Mail - Yaho... www.chandamama.c... My Pictures 16 - Paint 9:35 AM

பூஜை எனக்கு செய்யவில்லை?" என்று கேட்டான். முனிவருக்கு "மனைவி இல்லாதவன் அர்க்கிய பூஜை பெறத் தகுதி பெற்றவன் அல்ல. சுசர்மாவின் மனைவியை பலாகன் என்ற ராட்சசன் கவர்ந்து போயிருக்கிறான்" என்றார்.

உத்தமனும் பலாகன் இருக்கும் இடத்திற்குப் போய் சுசர்மாவின் மனைவியைக் கண்டான். அவளும் "இந்த ராட்சசன் என்னைச் சிறையில் வைத்திருக்கிறானே ஒழிய என்னைத் தன் மனைவியாக்கிக் கொள்ளவோ விழுங்கவோ விரும்பவில்லை" என்றாள்.

உத்தமனும் பலாகனிடம் "நீ இவளை ஏன் கவர்ந்து வந்தாய்?" என்று கேட்டான். அவனும் "இவளது கணவன் ராட்சசர்களை அழிக்க யாகங்கள் செய்கிறான். அப்படிச் செய்யும் போது அவனது மனைவி அவன் அருகில் இருந்தாலே அதற்குப் பலன் கிடைக்கும். இவள் இல்லாவிட்டால் அவன் எப்படி யாகம் செய்வான்? அதனால் இவளைக் கவர்ந்து வந்தேன்" என்றான். பிறகு அவன் அவளை உத்தமனிடம் ஒப்படைத்தான்.

உத்தமன் சுசர்மாவின் மனைவியை அழைத்துக் கொண்டு திரிகாலக்ஞரின் ஆசிரமத்திற்கு வந்தான். அவரிடம் தன் மனைவி பகுளை எங்கே இருக்கிறாள் எனக் கேட்டான். முனிவரும் அவள் நாகனின் மகளான நந்தையின் பாதுகாப்பில் இருப்பதாயும் அவளுக்கு எவ்வித ஆபத்தும் இல்லை என்றும் கூறினார்.

உத்தமன் பலாகனை அனுப்பித் தன் மனைவியை அழைத்து வரச் செய்தான். அதன் பின் அவன் தன் மனைவியுடன் சுகமாக வாழ்ந்தான். பகுளையும் அதற்குப் பிறகு தன் கணவனை மதித்து வந்தாள். இவர்களுக்குப் பிறந்தவன் உத்தம மனு.

மந்திர மகிமை

அம்பரீஷன் என்ற மன்னன் கோசல நாட்டை ஆண்ட போது அங்கு ஒரு முறை கொடிய பஞ்சம் ஏற்பட்டது. ஆறுகள், குளங்கள் கிணறுகள் வரண்டு போயின. பயிர்கள் விளையவில்லை.

அசுவமேதயாகம் செய்தால் பஞ்சம் தீரும் என மந்திரிகளும் புரோகிதர்களும் அரசனிடம் கூறினார்கள். அந்த யாகம் மிகவும் ஜாக்கிரதையாகச் செய்யப்பட வேண்டும்.

அந்த யாகத்திற்கு மிக அழகான குதிரையைத் தேர்ந்து எடுத்து அதை அலங்கரித்து அசுவமேத யாகத்தின் போது பலி கொடுக்கத் தயார் செய்தார்கள்.

18 - Paint
www.chandamama.com//archive/PdfFlip.php?lang=tamil&yr=1980&mnth=2&adOpt=0 - Google Chrome
www.chandamama.com//archive/PdfFlip.php?lang=tamil&yr=1980&mnth=2&adOpt=0
Fullscreen Exit 36 / 72

அம்பரீஷன் இந்திரப்பதவிக்காக யாகம் செய்கிறான் என தேவர்கள் எண்ணி அசுவமேதயாகத்தில் பலி கொடுக்கப்பட இருந்த குதிரையைத் திருடிக் கொண்டு போய் விட்டார்கள்.

யாகக் குதிரை காணாமல் போனது கண்டு அம்பரீஷனும் புரோகிதர்களும் மிகவும் கவலைப்பட்டார்கள். அதைத் தேடலானார்கள். அரசனின் வீரர்கள் காடுகளிலும் மலைகளிலும் அலைந்து திரிந்து தேடியும் யாகக் குதிரை கிடைக்கவில்லை.

அந்த நிலையில் புரோகிதர்கள் யாகக் குதிரைக்குப் பதிலாக யாராவது பிராம்மணப் பையன் கிடைத்தால் அவனை யாகத்தில் பலி கொடுத்து யாகத்தை முடிக்கலாம் என்று கூறினார்கள்.

அழகான அந்தண வாலிபனைத் தேடிக் கண்டு பிடித்துக் கொண்டு வந்து யாகத்தில் பலி இடுவது எளிதல்லவே. அம்பரீஷன் தேடித் திரிந்து முடிவில் ருசீகர் என்ற முனிவருக்கு மூன்று புதல்வர்கள் இருப்பதாகத் தெரிந்து அவரிடம் சென்றான்.

அம்பரீஷன் அவரிடம் அவரது ஒரு மகனைக் கேட்க அவர் "எனக்கு என் மூத்த மகன் மீது மிகப் பிரியம்" என்றார். அவரது மனைவியோ "எனக்கு என் கடைசி மகன் என் உயிர்" என்றாள். இரண்டாவது மகனான சுனசேபன் யாகத்தில் பலியாக முன் வந்தான்.

அம்பரீஷனும் சுனசேபனைத் தன் நகருக்கு அழைத்துச் சென்றான். வழியில் அவர்கள் விசுவாமித்திர முனிவரை தரிசித்தார்கள். அந்த முனிவர் சுனசேபன் மீது இரக்கம் கொண்டார்.

start Compose Mail - Yaho... www.chandamama.c... My Pictures 18 - Paint 9:36 AM

www.chandamama.com//archive/PdfFlip.php?lang=tamil&yr=1980&mnth=2&adOpt=0 - Google Chrome
www.chandamama.com//archive/PdfFlip.php?lang=tamil&yr=1980&mnth=2&adOpt=0
Fullscreen Exit 38 / 72

அவர் அவனுக்கு ஒரு மந்திரத்தை உபதேசித்து அதை ஜெபித்தால் அவனுக்கு எவ்வித ஆபத்தும் நேராது எனக் கூறினார். அம்பரீஷன் சுனசேபனை அழைத்துக் கொண்டு யாகம் நடக்கும் இடத்திற்குச் சென்றான்.

சுனசேபனை யாகத்தில் பலி கொடுக்க ஏற்பாடுகள் நடந்தன. அவனோ விசுவாமித்திரர் உபதேசித்த மந்திரத்தை ஜெபித்தான். அங்கிருந்த எல்லோரும் மரக் கட்டைகள் போலாகி அசையாது நின்றனர்.

அப்போது ஹோமகுண்டத்திலிருந்து இந்திரனே வெளியே வந்தான். அம்பரீஷனுக்கு யாகபலனை அளித்த சுனசேபனை விடுவித்தான். தேவர்கள் சுனசேபனைக் காத்ததால் அவனுக்கு தேவராதன் என்ற பெயர் ஏற்பட்டது.

தேவயானி

அசுரர்களின் குருவான சுக்கிராச்சாரியாரின் மகள் தேவயானி. சுக்கிரருக்கு மிருத சஞ்சீவினி என்ற மந்திரம் தெரியும். தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் போர் நடக்க அதில் இறந்த அசுரர்களை எல்லாம் சுக்கிராச்சாரியார் உயிர்ப்பித்து வந்தார். அந்த மந்திரத்தைக அவரிடமிருந்து கற்க தேவர்களின் குருவான பிரகஸ்பதியின் மகன் கசன் வந்து சுக்கிரரின் சீடனானான். அவனை ராட்சசர்கள் கொன்ற போதெல்லாம் தேவயானி தன் தந்தையிடம் கூறி மிருதசஞ்சீவினியால் அவனைப் பிழைக்க வைத்தாள். முடிவில் ராட்சசர்கள் செய்த தவறால் சுக்கிரர் கசனுக்கு மிருதசஞ்சீவினியை உபதேசிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. மந்திர உபதேசம் பெற்ற கசன் தேவலோகத்திற்குக் கிளம்பினான். அப்போது தேவயானி தான் அவனை மணக்க விரும்புவதைக் கூற அவனோ "குருவின் மகள் சகோதரிக்குச் சமம்" என்று கூறி விட்டுப் போய் விட்டான்.

சுக்கிரர் விருஷபர்வன் என்ற ராட்சச மன்னனிடம் இருந்து வந்தார். விருஷபர்வனுக்கு சர்மிஷ்டை என்ற மகள் இருந்தாள்.

ஒரு நாள் சர்மிஷ்டையும் தேவயானியும் ஆற்றில் குளிக்கச் சென்றார்கள். இருவரும் தம் ஆடைகளைக் களைந்து கரையில் வைத்து விட்டு ஆற்றில் குளித்தார்கள். அப்போது காற்று அடிக்க அவர்களது ஆடைகள் ஒன்று சேர்ந்தன. குளித்து விட்டு முதலில் கரை ஏறிய சர்மிஷ்டை சரியாகக் கவனியாமல் தேவயானியின் ஆடைகளை அணிந்து விட்டாள். பின்னர்

20 - Paint
www.chandamama.com//archive/PdfFlip.php?lang=tamil&yr=1980&mnth=2&adOpt=0 - Google Chrome
www.chandamama.com//archive/PdfFlip.php?lang=tamil&yr=1980&mnth=2&adOpt=0
Fullscreen Exit 40 / 72

கரைக்கு வந்த தேவயானி அவளிடம் "நீ எப்படி என் ஆடையை எடுத்து உடுத்திக் கொள்ளலாம்?" எனச் சண்டையிடலானாள்.

அதற்கு சர்மிஷ்டை "உன் ஆடை என்று ஒன்று இருக்கிறதா? எல்லாம் என் தந்தை உன் தந்தைக்குக் கொடுக்கும் சம்பளப் பணத்தில் வாங்கிய துணி தானே" என்றாள். வாக்குவாதம் பலத்தது. அதனால் ஆத்திரமும் கோபமும் கொண்டு சர்மிஷ்டை வழியில் இருந்த ஒரு கிணற்றில் தேவயானியைத் தள்ளி விட்டுப் போய் விட்டாள்.

கிணற்றில் விழுந்த தேவயானியின் அழுகைக் குரல் கேட்டு அவ்வழியே வந்த யயாதி என்ற மன்னன் அவளைக் கைகொடுத்து வெளியே தூக்கி விட்டான். இதற்குள் தேவயானியை அழைத்துப் போக அவளது தோழி கார்னிகை என்பவள் வந்தாள். தேவயானி தான் சர்மிஷ்டை உள்ள நகருக்கு வரமுடியாது எனக் கூறினாள். சுக்கிரரும் தலை நகரை விட்டுத் தன் மகளோடு செல்லத் தயாரானார்.

அப்போது விருஷபர்வன் தன் மகள் செய்த தவறை அறிந்து தன் மகளையே தேவயானிக்கு அடிமையாகக் கொடுத்து விட்டான். தேவயானியும் யயாதியை மணந்து கொண்டு சர்மிஷ்டையை அழைத்துக் கொண்டு யயாதியின் நகருக்குச் சென்றாள்.

யயாதிக்கும் தேவயானிக்கும் குழந்தைகள் எதுவும் பிறக்கவில்லை. யயாதி இரகசியமாகச் சர்மிஷ்டையைச் சந்தித்து வரலானான். இதனால் அவர்களுக்கு ஆண் குழந்தைகள் பிறந்தன. இந்த இரகசியம் வெகு நாட்கள் வரை தேவயானிக்குத் தெரியாமல் இருந்தது. அவள் அதனை அறிந்ததும் தன் தந்தையிடம் கூறி யயாதி கிழத்தனம் அடையுமாறு சபிக்கச் செய்தாள்.

அகப்பட்டார்கள் திருடர்கள்!

விஜயபுரியின் பட்டப்பகலிலேயே திருட்டுதனங்கள் ஏராளமாக நடக்கவே அரசன் திருடர்களைக் கண்டு பிடிக்கத் தன் வீரர்களை முடுக்கி விட்டான். நகரில் ஒரே பகுதியில் ஒரே சமயத்தில் திருட்டுப் போகாமல் பல பகுதிகளில் போவது கண்டு அரசன் நன்கு கவனிக்கவே அது இரு திருடர்கள் மட்டுமே செய்வதெனத் தெரிந்தது. ஆனால் இருவரும் சேர்ந்து திருடாமல் தனித்தனியாகத் திருடுகிறார்கள் என்று அரசன் தெரிந்து அவர்களைப் பிடிக்க என்ன செய்யலாம் என யோசித்தான். அவனுக்கு ஒரு வழி தெரிந்தது.

அவன் திருடர்களைப் பிடித்துக் கொண்டு வருபவர்களுக்கு பத்தாயிரம் ரூபாய் பரிசளிப்பதாக அறிவித்தான். திருடர்களில் ஒருவனான சின்னான் மாறு வேஷம் போட்டுக் கொண்டு தனக்குப் போட்டியாக இருந்த திருடன் பொன்னனை அரச சபைக்கு இழுத்து வந்தான். அரசனே மாறு வேடத்தில் வந்த சின்னனையும் கைது செய்யச் சொல்லி இருவரையும் விசாரித்து அவர்கள் திருடி ஒளித்து வைத்தவற்றைக் கண்டு பிடித்தான். அவர்களுக்குக் கடும் தண்டனையும் அளித்தான்.



21 - Paint
www.chandamama.com//archive/PdfFlip.php?lang=tamil&yr=1980&mnth=2&adOpt=0 - Google Chrome
www.chandamama.com//archive/PdfFlip.php?lang=tamil&yr=1980&mnth=2&adOpt=0
Fullscreen Exit 42 / 72

வழிப்பறிக்காரர்கள்

ரங்கன் இருந்த ஊர் பட்டணத்திலிருந்து சற்று தூரத்தில் இருந்தது. ஒரு முறை ரங்கன் பட்டணத்திலுள்ள தன் நண்பன் சேகரைப் பார்த்து விட்டு ஊர் திரும்ப ஒரு வாடகை வண்டியில் வந்து கொண்டிருந்தான். வண்டி ஒரு காட்டின் மத்தியில்தான் போயாக வேண்டும்.

வண்டி ஓரிடத்தில் பெரிய மரத்தருகே வந்த போது ஒரு பெரிய மரக்கிளை வெட்டிப் பாதையின் குறுக்கே போடப்பட்டிருந்தது. எனவே வண்டிக்காரன் வண்டியை நிறுத்தினான். அப்போது முகமூடி அணிந்த ஒரு திருடன் வந்து ரங்கனை மிரட்டி அவனிடமும் வண்டிக்காரனிடமும் இருந்த பணத்தை எல்லாம் பிடுங்கிக் கொண்டு போய் விட்டான். வண்டிக்காரன் ரங்கனிடம் "ஐயோ, என் மகள் கல்யாணத்திற்காக நான் கொஞ்சம் கொஞ்சமாகச் சேர்த்து வைத்திருந்த ஐநூறு ரூபாயையும் இந்தப் படுபாவி பிடுங்கிக் கொண்டு போய் விட்டானே. என்ன செய்வேன்?" என்று கூறி அழுதான். ரங்கனும் "கவலைப்படாதே. நான் உன் மகளின் கல்யாணத்திற்குப் பணம் கொடுக்கிறேன்" என்றான்.

ரங்கன் தன் ஊரை அடைந்ததும் வண்டிக்காரனுக்கு வண்டி வாடகையோடு ஐநூறு ரூபாயையும் கொடுத்து அனுப்பினான். பிறகு தன் அனுபவத்தை எழுதிப் பட்டணத்திலுள்ள சேகருக்கும் தெரிவித்தான்.

சேகரும் சில நாட்களுக்குப் பிறகு ரங்கனைக் காணக் கிளம்பினான். வாடகை வண்டிக்காரர்களில் ஒருவன்தான் ரங்கனது ஊருக்கு வண்டி ஓட்டி வர முன் வந்தான்.

வண்டி காட்டு வழியே போயிற்று. ஒரு பெரிய மரத்தடியே ஒரு மரக்கிளை பாதையின் குறுக்கே போடப்பட்டிருப்பதைக் கண்டு சேகர் "ரங்கன் கடிதத்தில் எழுதியபடி இப்போதும் நடக்கிறதே" என எண்ணினான். அதற்கு ஏற்றாற்போல வண்டிக்காரனும் வண்டியை நிறுத்தினான். மறு நிமிடமே முகமூடி அணிந்த திருடன் வந்து சேகரையும் வண்டிக்காரனையும் மிரட்டி அவர்களிடமிருந்த பணத்தையெல்லாம் பிடுங்கிக் கொண்டு விட்டான். அப்போது சேகரிடம் ஒரு பையில் சிறிய மூட்டை இருப்பது கண்டு திருடன் "இது என்ன?" என்று கேட்க சேகர் "சர்க்கரைப் பொங்கல்" என்றான். உடனே திருடன் "பேஷ், பேஷ். அதையும் கொடு. நான் சாப்பிடுகிறேன்" எனக் கூறி வெடுக்கெனப் பிடுங்கிக் கொண்டு ஓடி மறைந்தான்.

வண்டிக்காரன் வண்டியை ஓட்டியவாறே சேகரிடம் "ஐயோ, என் மகள் கல்யாணத்திற்காகச் சேர்த்து வைத்திருந்த ஐநூறு ரூபாயும் போயிற்றே" எனக் கூறிக் கதறி அழுதான்.



அப்போது சேகருக்கு வண்டிக்காரனுக்கும் திருடனுக்கும் தொடர்பு உள்ளது என்று விளங்கி விட்டது. ஏனெனில் இது போலத் தானே ரங்கனுக்கும் அனுபவம் ஏற்பட்டது. உடனே அவன் "வண்டியை நிறுத்து. உன் பணம் இப்போதே உனக்குத் திரும்பக் கிடைக்கப் போகிறது பார்" என்றான்.

வண்டிக்காரனும் "அது எப்படிக் கிடைக்கும்?" என்று கேட்க சேகரும் "அந்தத் திருடன் என்னிடமிருந்து எடுத்துப் போன சர்க்கரைப் பொங்கலில் எலிப் பாஷாணம் கலந்திருக்கிறது. அதை நான் என் நண்பன் வீட்டு எலி உபத்திரவத்தைப் போக்கவே கொண்டு போய்க் கொண்டிருந்

விஜயா நடராஜன்

start Compose Mail - Yaho... www.chandamama.c... My Pictures 21 - Paint 9:36 AM

22 - Paint
www.chandamama.com//archive/PdfFlip.php?lang=tamil&yr=1980&mnth=2&adOpt=0 - Google Chrome
www.chandamama.com//archive/PdfFlip.php?lang=tamil&yr=1980&mnth=2&adOpt=0
Fullscreen Exit 44 / 72

தேன். பாவம் அந்தத் திருடன் அதைச் சாப்பிட்டுத் துடி துடித்து இறப்பான். அதனால் அவனை நாம் சுலபமாகக் கண்டு பிடித்து நம் பணத்தைப் பெறலாம்'' என்றான்.

உடனே வண்டிக்காரன் ''டே முருகா! பொங்கலைச் சாப்பிட்டு விடாதே'' எனக் கூவி வண்டியிலிருந்து குதித்தான். சேகர் சட்டெனப் பாய்ந்து அவனைப் பிடித்துக் கொண்டு ''ஓ! நீ அந்தத் திருடனின் கூட்டாளியா? உன்னை விட மாட்டேன்'' என்றான்.

வண்டிக்காரனும் ''ஐயா, உங்கள் காலில் விழுகிறேன். என்னை மன்னித்து விட்டு விடுங்கள். நான் ஓடி என் மகன் முருகனைக் காப்பாற்ற வேண்டும்'' என்றான். சேகரும் ''சரி வா. நானும் வருகிறேன்'' எனவே இருவரும் வண்டிக்காரனின் வீட்டை அடைந்தார்கள்.

அங்கே முருகன் அப்போது தான் சர்க்கரைப் பொங்கலைச் சாப்பிட்டு முடித்துக் கை கழுவிக் கொண்டிருந்தான். வண்டிக்காரன் விஷயத்தைச் சொன்னதும் முருகனின் வயிற்றைக் கலக்கியது.

சேகரும் ''இவனை உடனே வைத்தியரிடம் காட்டி மருந்து கொடுக்கலாம். இல்லா விட்டால் இறந்து விடுவான்'' எனவே வண்டிக்காரனும் முருகனையும் சேகரையும் வண்டியில் ஏற்றிக் கொண்டு ரங்கனின் அறை அடைந்தான்.

அங்கே அவர்களை ரங்கனின் வீட்டில் விட்டு விட்டு சேகர் வைத்தியரை அழைத்து வருவதாகச் சொல்லிப் போனான். சற்று நேரத்தில் சேகர் காவல் வீரர்களோடு வந்தான். வைத்தியர் வருவார் என எதிர்பார்த்த முருகனும் வண்டிக்காரனும் காவல் வீரர்களிடம் அகப்பட்டனர்.

சேகரும் சிரித்தவாறே ''சர்க்கரைப் பொங்கலில் விஷம் இல்லை. உங்களைப் பிடிக்க நான் செய்த தந்திரம்'' என்றான் சிரித்தவாறே.

யார் கெட்டிக்காரன்?

வைர வியாபாரி வைத்தியராமன் தன் வியாபாரத்தை தன் இரு மகன்களில் யாரிடம் ஒப்படைப்பது என்பதற்காக அவர்களைப் பரீட்சிக்க விரும்பி இருவரிடமும் போலி வைரக்கல் ஒன்று ஒன்றைக் கொடுத்து அவை உயர்ந்த வைரக்கல் எனவும் அவற்றை விற்று வரும்படியும் கூறினான்.

மூத்தமகன் திரும்பி வந்து ''அப்பா! நீங்கள் என்னிடம் கொடுத்தது போலி வைரம். பத்து வராகன்களுக்கு மேல் விலை போகவில்லை'' என்றான். இரண்டாவது மகன் திரும்பி வந்து ''அப்பா, நீங்கள் கொடுத்தது போலி வைரம். ஆனாலும் அது புது மாதிரியாக இருந்தது என கூறி நூறு வராகன்களுக்கு விற்று வந்தேன்'' என்றான்.

அப்போது வைத்தியராமன் ''உங்களிடம் நான் கொடுத்தது அசல் வைரங்களே. இப்போது போலி வைரங்களைக் கொடுக்கிறேன். விற்று வாருங்கள்'' எனக் கூறி ஆளுக்கு ஒரு நல்ல வைரத்தைக் கொடுத்தான். முதலாவது மகன் சற்று நேரத்தில் வந்து ''நீங்கள் இப்போது கொடுத்த போலி வைரத்தைக் கொடுத்து விட்டு முன்பு நீங்கள் கொடுத்த நல்ல வைரத்தை வாங்கி வந்து விட்டேன்'' என்றான். இரண்டாவது மகனோ திரும்பி வந்து ''அப்பா, நீங்கள் இப்போது கொடுத்தது அசல் வைரம். அதை பத்தாயிரம் வராகன்களுக்கு விற்றேன். முதலில் நீங்கள் கொடுத்த வைரத்தையும் வாங்கி வந்தேன்'' என்றான். வியாபாரி தன் வியாபாரத்தை இளைய மகனிடம் ஒப்படைத்தான்.

start Compose Mail - Yaho... www.chandamama.c... My Pictures 22 - Paint 9:37 AM

23 - Paint
www.chandamama.com//archive/PdfFlip.php?lang=tamil&yr=1980&mnth=2&adOpt=0 - Google Chrome
www.chandamama.com//archive/PdfFlip.php?lang=tamil&yr=1980&mnth=2&adOpt=0
Fullscreen Exit 46 / 72



குருவின் சிறந்த சீடன்

கோவிந்தன் ஒரு பண்டிதரின் வீட்டு வேலையாளாகச் சேர்ந்தான். அவனுக்குத் தானும் படிக்க வேண்டும் என்ற ஆசை இருந்தது. எனவே அவ்வப்போது பண்டிதர் தம் சீடர்களுக்குச் சொல்லிக் கொடுக்கும் பாடங்களை நின்று கவனமாகக் கேட்பான்.

ஒரு நாள் அவன் இப்படிக் கேட்கும் போது தன் வேலையை மறந்து விட்டான். அப்போது பண்டிதரின் மனைவி அவனைத் திட்டலானாள். பண்டிதரும் "கோவிந்தா! இப்போது இங்கே நின்று நான் சீடர்களுக்குச் சொல்லிக் கொடுத்ததைக் கேட்டாயே. நீ என்ன கேட்டாய் என்று சொல்" என்றார்.

கோவிந்தனும் "நான் பாடத்தைக் கேட்டேன். எனக்கும் படிப்பு கற்றுக் கொள்ள ஆசை" எனக் கூறி அன்று பண்டிதர் தம் சீடர்களுக்குக் கூறிய அப்பாடத்தை அப்படியே ஒப்பித்தான். பண்டிதரும் "அடே! இது மிகவும் கடினமான பாடம். ஒரு முறை கேட்டதுமே உன் மனதில் பதிந்து விட்டதே" எனப் பாராட்டினார். பிறகு அவனை அவர் உற்சாகப்படுத்தி "இன்று முதல் நீயும் என் சீடர்களில் ஒருவன்" எனக் கூறி கல்வி புகட்டி வரலானார்.

கோவிந்தன் எல்லாச் சீடர்களிலும் முதல்வனாக விளங்கினான். இதனால் மற்ற சீடர்களுக்கு அவன் மீது பொறாமையே ஏற்பட்டது. அவர்கள் தம் குருவிடம் கோவிந்தனைப் பற்றிக் கோள் கூறவே அவரும் "அவன் சரஸ்வதிதேவியின் மறு அவதாரம் போலிருக்கிறது. நான் ஒரு முறை சொன்னாலே புரிந்து கொண்டு விடுகிறான். இன்னும் கொஞ்ச நாட்களில் என்னையே மிஞ்சி விடுவான் போலிருக்கிறது" என்றார்.

படிக்கும் போதே கோவிந்தன் வடமொழியில் செய்யுள்கள் இயற்றினான். அவற்றை பண்டிதர்கள் பாராட்டினார்கள். பல கூட்டங்கள் கூட்டிப் பெரியவர்கள் வாயிலாகப் பல பரிசுகளை அளித்து அவனை கௌரவித்தார்கள். அவன் பல நாடகங்களையும் வடமொழியில் எழுதிக் கொடுத்தான். அவற்றை மேடைகளில் நடிக்கலாயினர். அதனால் கோவிந்தனது புகழ் மேலும் பரவியது.

இதைக் கண்டு பொறாமை கண்டு சில சீடர்கள் தம் ஊருக்குப் போய் கோவிந்தனை விடப் புகழ் பெற்ற நாடக ஆசிரியரை அழைத்து வருவதாகக் கூறிவிட்டு தமது குருவின் ஊரான உஜ்ஜயினியிலிருந்து கிளம்பித் தம் ஊருக்குப் போனார்கள்.

தம் ஊரை அடைந்த அந்த சீடர்கள் பத்திரகவி என்ற பிரசித்தி பெற்ற நாடக ஆசிரியரிடம் போய் "தம் நாட்டில் தம் மொழியில் உங்களது நாடகங்கள் புகழ் பெற்று விளங்குகின்றனவே. உங்களது நாடகங்களை நாங்கள் பார்த்து நன்கு ரசித்தோம். அவற்றை நீங்கள் வடமொழியில் மொழி பெயர்த்து விட்டால் பல நாடுகளில் அவை நடிக்கப்படும். உங்களுக்கும் மேலும் புகழ் கிடைக்கும். நம் நாட்டிற்கும் பெருமை ஏற்படும். இதற்கு நாங்கள்

பாபநாசம் சாமா

start Compose Mail - Yaho... www.chandamama.c... My Pictures 23 - Paint 9:37 AM

உங்களுக்கு உதவுகிறோம்" என்றார்கள்.

பத்திரகவியும் "இப்படி நீங்கள் எனக்கு உதவ முன் வந்ததற்கு மிக்க நன்றி. ஆனால் ஒரு விஷயம். இதுவரை நான் எழுதி நடிக்கப் பட்ட நாடகங்கள் எல்லாம் என் சொந்தக் கற்பனையால் எழுதப் பட்டவை அல்ல. அவற்றை நான் வடமொழியிலிருந்து நம் மொழியில் மொழி பெயர்த்துத் தான் கொடுத்தேன். எனவே எனது நாடகங்களை மீண்டும் வடமொழியில் எழுதுவது என்பதற்கு இடமே இல்லை" என்றார்.

அப்போது அந்த சீடர்கள் "அப்படியா! மிகவும் ஆச்சரியமாக இருக்கிறதே. அப்படியானால் நீங்கள் மொழி பெயர்த்த நாடகங்களை வடமொழியில் எழுதிய அந்த மாபெரும் ஆசிரியர் யாரோ?" என்று கேட்டார்கள்.

அதற்கு பத்திரகவி "அவர் மாபெரும் பண்டிதர். கவிஞர். நாடக ஆசிரியரும் கூட. அவர் உஜ்ஜயினியில் வசிக்கிறார். அவரது பெயர் கோவிந்தன் என்பதாகும்" எனப் பெருமையுடன் கூறினார்.

அந்த சீடர்கள் திடுக்கிட்டு கல்லாய்ச் சமைந்து போனார்கள். அவர்களுக்கு ஒரே அவமானமாகவும் போய் விட்டது. கோவிந்தனின் நாடகங்கள் பிறமொழிகளிலும் மொழியாக்கம் செய்யப் பட்டு நடிக்கப் படுகின்றனவா! அப்படியானால் அவற்றின் மேன்மையை உணராமல் பொறாமை கொண்டு கோவிந்தனைப் பொறாமைக் கண்களோடு பார்ப்பது எவ்வளவு மட்டமான செயல் என்பதை அவர்கள் உணர்ந்தார்கள். மறுபேச்சுப் பேசாமல் அவர்கள் உஜ்ஜயினிக்குத் திரும்பிப் போனார்கள். அவர்கள் தம்முடன் படிக்கும் கோவிந்தனிடம் பொறாமை கொள்ளாமல் அவனைப் பாராட்டிப் புகழ்ந்தார்கள்.

பரிகாரம்

ஒரு ஊரில் சங்கிலி என்ற திருடன் இருந்தான். அவன் தான் திருடுவது பாவம் என எண்ணி அதற்குப் பரிகாரம் ஏதாவது உண்டா என அறிய விரும்பினான். அப்போது அவ்வூருக்கு வந்த ஒரு கபட சன்னியாசி மக்களிடம் "மனிதர்கள் பாவம் செய்வது தங்களது தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளவே. ஆனால் அப்படிச் செய்யும் பாவங்களுக்குப் பரிகாரம் உண்டு. தாம் செய்த பாவச் செயல்களால் சம்பாதித்த பணத்தில் பாதியை கடவுளின் கைங்கரியத்திற்காக தானம் செய்தால் அந்தப் பாவம் போய் விடும். இதோ நான் வாசலில் உண்டியல் வைத்திருக்கிறேன். இவ்வூரில் பாவம் புரிந்து பணம் சம்பாதித்தவர்கள் தமக்கு கிடைத்த பணத்தில் பாதியைப் போடலாம். இப்படி உங்கள் பாவ பரிகாரத்திற்கான பணத்தைப் போட்டு தரும காரியங்களுக்கு உதவலாம்" எனக் கூறினார்.

அன்று உண்டியலில் ஏராளமான பேர்கள் பணம் போடுவது கண்டு கபட சன்னியாசி திருப்தி அடைந்தார். இரவில் எல்லோரும் போன பிறகு உண்டியலை எடுத்த போது அதில் பாதிவரை தான் பணம் இருந்தது. அதில் "சுவாமி, உங்கள் உண்டியல் பணம் முழுவதையும் நான் திருடினேன். நீங்கள் கூறியபடி என் பாவத்திற்குப் பரிகாரமாகப் பாதிப் பணம் விட்டுப் போகிறேன்—சங்கிலி" என்று எழுதி இருந்தது.

25 - Paint
www.chandamama.com//archive/PdfFlip.php?lang=tamil&yr=1980&mnth=2&adOpt=0 - Google Chrome
www.chandamama.com//archive/PdfFlip.php?lang=tamil&yr=1980&mnth=2&adOpt=0
Fullscreen Exit 50 / 72

கடனைத் தீர்த்துவிடு

தனபாலன் பெரிய பணக்காரன். அவன் தன் மகளின் கல்யாணத்தின் போது அவளுக்கு நகைகளை வைரமுத்து என்ற நகை வியாபாரியிடம் வாங்கினான். அவன் ஐம்பதாயிரம் ரூபாய்க்கு நகைகளைத் தேர்ந்து எடுத்து நாற்பதாயிரம் ரூபாய்களை வியாபாரிக்குக் கொடுத்தான். மீதம் பத்தாயிரத்தைப் பிறகு தருவதாகக் கூறிப் போனான். வைரமுத்துவும் அதை எந்தக் கணக்குப் புத்தகத்திலும் குறித்து வைக்கவில்லை. ஏனெனில் தனபாலன் நேர்மையானவன் என்பதும் பட்ட கடனைச் செலுத்தி விடுவான் என்றும் அவனுக்குத் தெரியும்.

தனபாலனும் வைரமுத்துவின் கடனைத் தீர்க்க முயன்றான். ஆனால் ஒரே சமயம் அவ்வளவு பெரிய தொகை சேராததால் நாட்களைத் தள்ளிப் போடலானான். அவனும் பல பிரச்னைகளில் சிக்கி உடல் நலமும் இழந்து படுத்த படுக்கையானான். இறக்குமுன் தன் மகன் மாணிக்கத்திடம் "மகனே, நான் வைரமுத்துவிற்கு பத்தாயிரம் ரூபாய் பாக்கி கொடுக்க வேண்டும். நீ அதை எப்படியாவது தீர்த்தாலே என் ஆத்மா சாந்தி அடையும்" என்றான். மகனும் அக்கடனைத் தீர்ப்பதாக வாக்களிக்கவே தனபாலனும் நிம்மதி அடைந்து உயிர் துறந்தான்.

மாணிக்கம் தன் தகப்பனார் தீர்க்க வேண்டிய கடன் பாக்கி பத்தாயிரம் ரூபாயைச் சேர்க்க அரும்பாடு பட்டான். பல வருடங்களுக்குப் பிறகே அவனால் அத்தொகையைச் சேர்க்க முடிந்தது. மாணிக்கம் அந்தப் பணத்தை எடுத்துக் கொண்டு பட்டணத்திற்குப் போய் வைரமுத்துவின் கடை விலாசத்தை விசாரித்தான்.

எல்லோரும் "வைரமுத்துவின் கடை இப்போது இல்லை. அதோ அது தான் அவன் வீடு" என ஒரு பெரிய வீட்டைக் காட்டினார்கள். மாணிக்கம் அங்கே போனதும் வாசலில் ஒரு வாலிபன் நிற்பதைப் பார்த்தான். அவனிடம் மாணிக்கம் "இது தானே வைரமுத்துவின் வீடு? அவர் இருக்கிறாரா?" என்று விசாரித்தான்.

அந்த வாலிபனும் "இந்த வீடு அவருடையது தான். ஆனால் அவர் இறந்து போய் விட்டார். அவரது மகனும் அவர் வைத்து விட்டுப் போன கடனைத் தீர்க்க முடியாமல் எங்கோ ஓடிப் போய் விட்டான்" என்றான்.

அது கேட்டு மாணிக்கம் "வைரமுத்து கடன் வைத்து விட்டா இறந்தார்? ஆச்சரியமாய் இருக்கிறதே!" என்றான். அதற்கு அந்த வாலிபன் "இதில் ஆச்சரியம் என்ன? அவர் பணத்திற்கு ஆசைப்பட்டு கப்பலில் சரக்கு ஏற்றி வியாபாரம் செய்யலானார். கப்பல் நடுக் கடலில் மூழ்கவே பெருத்த நஷ்டம் ஏற்பட்டுக் கடனாளியாக ஆனார். அவர் இறக்க அவருடைய மகனுக்குக் கடன்தான் மிஞ்சியது" என்றான் ஏளனமாக.

அப்போது மாணிக்கம் "ஐயோ பாவமே! என் தந்தை வைரமுத்துவிடம் நகைகள் வாங்கி பத்

வள்ளி நீலமேகம்

start Compose Mail - Yaho... www.chandamama.c... My Pictures 25 - Paint 9:37 AM

26 - Paint
www.chandamama.com//archive/PdfFlip.php?lang=tamil&yr=1980&mnth=2&adOpt=0 - Google Chrome
www.chandamama.com//archive/PdfFlip.php?lang=tamil&yr=1980&mnth=2&adOpt=0
Fullscreen Exit 52 / 72

தாயிரம் ரூபாய் கடன் பாக்கி வைத்திருந்தார். அதை அவரால் திருப்பிக் கொடுக்க முடியவில்லை. அவருக்கும் விவசாயத்தில் நஷ்டம் ஏற்பட்டது. ஆனால் இறக்குமுன் அவர் என்னிடம் வைரமுத்துவின் கடனை அடைக்கும்படி கூறினார். நான் என் தந்தை கொடுக்க வேண்டிய பணத்தை எடுத்து வந்திருக்கிறேன். ஆனால் வைரமுத்துவோ அவரது மகனோ இல்லையே. என்ன செய்வது? இந்தப் பணத்தைக் கொண்டு வைரமுத்துவின் பேரில் ஒரு சத்திரம் கட்டி தர்மம் செய்கிறேன். அப்போதுதான் என் தந்தையின் ஆத்மா சாந்தி அடையும்'' என்றான்.

அப்போது அந்த வாலிபன் ''ஐயா, வைரமுத்துவின் மகன் எங்கும் ஓடி விடவில்லை. நான்தான் அவரது மகன். கடனாளியாக இருக்கிறேன். நீங்கள் கடனை வசூலிக்க வந்தவரோ என எண்ணி பயந்தே உங்களிடம் அப்படி ஒரு பொய் சொன்னேன்'' என்றான்.

அப்போது மாணிக்கம் ''தம்பி! தந்தை விட்டுப் போன கடனைக் கண்டு ஏன் பயப்பட வேண்டும்? தந்தையின் நற்பெயரைக் காக்க மகன் முயல வேண்டாமா? அதற்காக எப்படிப் பட்ட கஷ்டத்தையும் அவன் சமாளிக்க வேண்டும். நான் என் தந்தை விட்டுப் போன கடனைத் தீர்க்க எவ்வளவு பாடு பட்டிருக்கிறேன் தெரியுமா? இதோ இந்தப் பத்தாயிரத்தை வைத்துக் கொண்டு வியாபாரம் செய். லாபம் வரும். உன் தந்தையின் கடனை முதலில் தீர்த்து விடு'' எனக் கூறி அந்த வாலிபனிடம் பணத்தைக் கொடுத்து விட்டுப் போனான்.

வைரமுத்துவின் மகனும் அந்தப் பணத்தை முதலாகப் போட்டு வியாபாரம் செய்து லாபம் அடைந்து தனது தந்தை விட்டுப் போன கடன்களைத் தீர்த்தான்.

தேவர்கள் ஆதிசக்தியான தேவியை வணங்கி வரங்கள் பல பெற்றுக் கொண்டார்கள். அவர் தம் கஷ்டங்கள் தீர சுக வாழ்வு வாழ்ந்தனர்.

சுரதன் என்ற மன்னன் பெரிய நாட்டை ஆண்டு வந்தான். அவன் பூஜை, விரதம் என்னும் பல நியமங்களை மேற்கொண்டு புண்ணிய காரியங்களையே செய்து வந்தான். ஆனால் அவனது நாட்டின் மீது அன்னியர்களும் மலேச்சாதியினரும் பெருத்த படைகளுடன் தாக்கலானார்கள்.

போர் நடந்தது. சுரதனால் அந்த பலத்த தாக்குதலை எதிர்க்க முடியவில்லை. தனது மந்திரிகளே எதிரிகளுக்கு உளவாளிகளாக இருப்பதையும் அவன் கண்டான். அப்போது அவன் ''இந்த மந்திரிகள் எனக்குத் துரோகம் புரிந்து என்னையே எதிரிகளிடம் ஒப்படைத்தாலும் ஒப்படைத்து விடுவார்கள். அவர்களுக்கு தம் பதவியும் பணமுமே முக்கியமாகப்படும். பணத்தை எப்படியாவது அடைய வேண்டும் என எண்ணுபவன் என்னதான் செய்ய மாட்டான்? பணத்தை விரும்புவர்கள் எல்லாம் தாய் தந்தை தாரம், தனயன் தங்கை என்றெல்லாம் கூடப் பார்க்க மாட்டார்கள்'' என எண்ணினான்.

அவன் இனியும் தன் அரண்மனையில் இருப்பது ஆபத்து என எண்ணி ஒரு குதிரை மீது ஏறிக் காட்டிற்

சுரதனின் சரிதம்

start Compose Mail - Yaho... www.chandamama.c... My Pictures 26 - Paint 9:38 AM

27 - Paint
www.chandamama.com//archive/PdfFlip.php?lang=tamil&yr=1980&mnth=2&adOpt=0 - Google Chrome
www.chandamama.com//archive/PdfFlip.php?lang=tamil&yr=1980&mnth=2&adOpt=0
Fullscreen Exit 54 / 72

குள் தப்பி ஓடினான். ஓங்கி உயர்ந்து அடர்ந்து வளர்ந்த மரங்களையும் அவன் கடந்து புலி, சிங்கம், யானை போன்ற மிருகங்களுக்கு அகப்படாமல் சென்று கொண்டிருந்தான்.

அந்தக் காட்டில் மிருகங்கள் சுதந்திரமாகத் திரிவதையும் ரிஷிகளின் சீடர்கள் வேத மந்திரங்கள் உச்சரிப்பதையும், ஹோமங்கள் செய்து கொண்டிருப்பதையும் அவன் கண்டான். தன்னுடைய பசியைத் தீர்த்துக் கொள்ள மரங்களில் பழுத்த பழங்கள் இருப்பது கண்டு அவன் அவற்றை வேண்டிய மட்டும் பறித்துத் தின்றான்.

சற்று தூரத்தில் ஒரு முனிவரது ஆசிரமத்தைக் கண்டு சுரதன் அங்கு சென்றான். அங்கு மான் தோலின் மீது அமர்ந்துள்ள முனிவரை அவன் வணங்கிக் கண்ணீர் வடிக்கலானான். முனிவரும் அவனுக்கு ஆசனம் அளித்து, உபசரித்து "அப்பனே! நீ யார்? எங்கிருந்து வருகிறாய்? உனக்கு என்ன கவலை? என்னிடம் சொல். நான் உன் கவலையைப் போக்குகிறேன்" என்று கனிவுடன் கூறினார்.

சுரதனும் "முனிசிரேஷ்டரே. நான் சுரதன் என்ற அரசன். என் நாட்டை எதிரிகள் தாக்கவே நான் தப்பி ஓடி வந்து உங்களிடம் சரண் புகுந்திருக்கிறேன். என் மனைவி, மக்கள், நாடு எல்லாம் எப்படிப் பட்ட நிலையில் உள்ளதென்று கவலைப் படுகிறேன். நீங்கள் என்ன சொன்னாலும் அதன்படியே நடக்கிறேன். எனக்கு ஏற்பட்ட எதிரிகளின் பயத்தைப் போக்கி என் மனைவி மக்களுடன் நான் மீண்டும் சேர வழி சொல்ல வேண்டும்" என வேண்டினான்.

முனிவரும் "கவலைப்படாதே. நீ எவ்வித பயமும் இல்லாமல் இங்கே இருக்கலாம். இந்தக் காட்டில் எல்லோரும் இருப்பது போல நீயும் நடைமுறைகளைக் கடைப்பிடி. எளிய உணவை உண்டு,

எந்தப் பிராணியையும் ஹிம்சிக்காமல் சுயேச்சையாக நீயும் இந்த ஆசிரமத்தில் இருந்து வா. நாளாவட்டத்தில் உனக்கும் நல்லதே ஏற்படும்" என்றார். சுரதனும் ஆசிரம வாழ்க்கையை மேற்கொண்டு அந்த ஆசிரமத்தில் இருந்து வரலானான்.

ஒரு நாள் சுரதன் ஒரு மரத்தடியே உட்கார்ந்து கொண்டு "நான் ஒரு தப்பிதமும் செய்யவில்லையே. புண்ணியச் செயல்களைத்தானே செய்து வந்தேன். அப்படி இருந்தும் என் நாட்டை இழந்து மனைவி மக்களை விட்டுப் பிரிந்து ஏன் வாழ வேண்டி இருக்கிறது?" என்று யோசிக்கலானான். அப்போது ஒரு வணிகன் அந்த மரத்தடியே வந்து உட்கார்ந்தான். அவன் முகமும் வாட்டமுற்று இருந்தது.

சுரதனும் வணிகனைப் பார்த்து "நீ யாரப்பா? உனக்கு வந்த கவலை என்ன?" என்று கேட்டான். அந்த வணிகனும் "நான் வணிககுலத்தில் பிறந்தவன். பணக்காரன். நேர்மையுடன் நடந்து கொண்டுவருபவன். ஏராளமான தானதர்மங்கள் செய்தும் வருகிறேன். இதுவரை எவ்விதக் கஷ்டத்தையும் அனுபவிக்கவில்லை. ஆனால் இப்போதோ என் மனைவியும் மக்களும் என்



பணத்தை எல்லாம் பிடுங்கிக் கொண்டு என்னை வீட்டை விட்டே விரட்டி விட்டார்கள். அதனால் தான் நான் இப்போது இங்கு வந்திருக்கிறேன். நீங்கள் யாரோ? நீங்களும் கவலைப் படுவது போலத் தெரிகிறதே" என்று கேட்டான்.

சுரதனும் "நான் ஒரு மன்னன். சுரதன் என்பது என் பெயர். என் எதிரிகளிடம் அகப்பட்டுக் கொண்டு சித்திரவதைக்கு ஆளாவதைத் தவிர்க்கவே இந்தக் காட்டிற்கு ஓடி வந்தேன். நாட்டை இழந்து, மனைவி மக்களைப் பிரிந்து மரக்கட்டை போல உணர்ச்சியற்று இங்கே இருந்து வருகிறேன்.

start Compose Mail - Yaho... www.chandamama.c... My Pictures 27 - Paint 9:38 AM

28 - Paint
www.chandamama.com//archive/PdfFlip.php?lang=tamil&yr=1980&mnth=2&adOpt=0 - Google Chrome
www.chandamama.com//archive/PdfFlip.php?lang=tamil&yr=1980&mnth=2&adOpt=0
Fullscreen Exit 56 / 72



நீயும் என் நிலையில் இருக்கிறாய். இருவரும் இங்கேயே இருந்து காலம் கழிக்கலாம்'' என்றான்.

அது கேட்டு வணிகன் ''அரசே, இங்கே எனக்கு மன நிம்மதி எப்படி ஏற்படும்? என் கவலையே போயிற்றே. என் குடும்பம் நசித்து விடும். என் புதல்வர்கள் உதவாக்கரைகள். பணத்தைக் கண்டபடி செலவு செய்து விட்டு ஓட்டாண்டி ஆகி விடுவார்களே. நான் கால் வயிறு அரை வயிறு எனச் சாப்பிட்டுக் கஷ்டப்பட்டுச் சேர்த்த பணம் எல்லாம் கரைந்து போய் விடுமே! அவர்கள் ஏழைகளாகித் திரியும் போது எனக்கு நிம்மதி ஏது! மறுபடியும் நான் அவர்களைப் பார்க்கப் போகிறேனோ என்னவோ!'' என்று புலம்பினான்.

அப்போது சரதன் ''உன்னை வீட்டை விட்டுத் துரத்திய அந்த ராட்சச ஜன்மங்களை நீ மறுபடியும் பார்த்தால் மட்டும் உனக்குச் சுகம் கிடைத்து விடுமா? நானும் என் நாடு போய் விட்டதே என்று மனம் வருந்துகிறேன். இதெல்லாம் விதியின் விளையாட்டு. நீ என்னுடன் வா. ஆசிரமத்திலுள்ள முனிவரை தரிசித்து நாம் இருவருமே நம் சுகவாழ்விற்கு ஏதாவது வழி தேடலாம்'' எனக் கூறி அந்த வணிகனை அழைத்துப் போனான்.

சரதன் முனிவரிடம் ''முனி சிரேஷ்டரே! இவன் ஒரு வணிகன். இவனை நான் காட்டில் சந்தித்தேன். இவனை இவனது மனைவி மக்கள் வீட்டை விட்டுத் துரத்தி விட்டார்களாம். உங்களிடம் புகலிடம் கேட்டு வந்திருக்கிறான். எனக்குப் புகலிடம் அளித்தது போல இவனுக்கும் இடம் கொடுங்கள். நானும் இவனும் ஒரே நிலையில் இருப்பதால் இருவர் கஷ்டங்களும் போக நீங்கள்தாம் வழி செய்ய வேண்டும்'' என வேண்டினான்.

முனிவரும் ''திரிமூர்த்திகளே மாயையில் சிக்கி ஆசைக் கடலில் ஆழ்ந்து அவஸ்தைப் பட்டார்கள் என்றால் நம் போன்ற மானிடர்

களைப் பற்றி என்ன என்பது? இதற்கு ஒரு கதை கூறுகிறேன்'' எனக் கூறி கதை சொல்லலானார்.

கிருதயுகத்தில் சுவேதத் தீவில் விஷ்ணு தவம் புரிந்து கொண்டிருந்தார். அப்போது பிரம்மாவும் ஆசைகளை அடக்கத் தவம் செய்ய அங்கு வந்தார். இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டு ''நீர் யார்?'' என்ற கேள்வியைக் கேட்டார்கள்.

பிரம்மாவோ கர்வத்தோடு ''நானா? அகில உலகங்களிலுள்ள ஜீவராசிகளையும் மற்ற பொருள்களையும் சிருஷ்டி செய்யும் பிரம்மா'' என்றார். அது கேட்டு விஷ்ணு ''ஓ! உலகை உருவாக்கிய என்னிடமே இப்படிச் சொல்கிறீரா? நான் தான் உலகைப் படைத்தவன். மது கைடபர்களைக் கொன்று உம்மையே காப்பாற்றியவன். உம்மை நான் தான் வளர்த்துப் பெரியவனாக்கினேன். ராட்சஸர்கள் உம்மைத் தாக்கிய போது அலறிப் புடைத்துக் கொண்டு என்னிடம் வந்ததை எல்லாம் மறந்து விட்டீரா?'' என்று கேட்டார்.

பிரம்மாவும் ''ஆமாம், வந்தேன். ஆனால் நீரா தனியாக நின்று போர் புரிந்து காப்பாற்றினீர்? ஜகதம்பிகை வந்து உமக்குத் துணை புரிந்ததாலே உம்மால்

வெற்றி பெற முடிந்தது. இதை மறந்து விட்டீரோ?'' என எகத்தாளமாகக் கூறி நகைத்தார்.

இப்படி அவர்கள் வாக்குவாதம் புரிந்து கொண்டிருந்த போது அவர்களுக்கு ஒரு மிகப் பெரிய லிங்கம் தென்பட்டது. அந்த லிங்கத்திலிருந்து ''பிரம்மா! விஷ்ணு!! நீங்கள் இருவரும் வாக்குவாதம் செய்வதை விட்டுவிட்டு இப்போது இந்த லிங்கத்தின் அடிப்பாகம் எங்கே உள்ளது என்றும் மேல் உச்சி எங்கே உள்ளது என்றும் போய் பார்த்து விட்டு வாருங்கள். உங்களில் யார் அப்படிப் பார்த்து விட்டு முதலில் வருகிறாரோ அவரே உங்களில் உயர்ந்தவர்''

start Compose Mail - Yaho... www.chandamama.c... My Pictures 28 - Paint 9:38 AM

www.chandamama.com//archive/PdfFlip.php?lang=tamil&yr=1980&mnth=2&adOpt=0 - Google Chrome

என்ற குரல் ஒலித்தது. இருவரும் அதற்கு ஒப்புக் கொண்டனர். விஷ்ணு லிங்கத்தின் கீழ் நோக்கிச் சென்று பாதாள லோகம் போனார். அப்போதும் லிங்கத்தின் அடிப்பாகம் உள்ள இடத்தைக் காண முடியவில்லை. பிரம்மா லிங்கத்தின் மேலே ஆகாயத்தில் கிளம்பிச் சென்றார். எவ்வளவு உயரப் போயும் அவருக்கு லிங்கத்தின் மேல் பகுதியின் உச்சி தெரியவில்லை.

அப்போது ஒரு தாழம்பூ மேலிருந்து கீழே விழுந்து கொண்டிருந்தது. அது லிங்கத்தின் உச்சாந்தலையிலிருந்து விழுந்தது என பிரம்மா கண்டு அதனை எடுத்துக் கொண்டு வந்தார். விஷ்ணுவும் கவலை தோய்ந்த முகத்தோடு திரும்பி வந்தார்.

பிரம்மாவோ "நான் லிங்கத்தின் உச்சாந்தலையைப் பார்த்து விட்டு அங்கிருந்த இந்த தாழம்பூவை எடுத்து வந்திருக்கிறேன். வேண்டுமானால் இந்தப் பூவிடமே கேட்டுப் பாரும்" என்று விஷ்ணுவிடம் கூறினார். விஷ்ணுவும் தாழம்பூவிடம் "இந்த பிரம்மா கூறுவது உண்மைதானா? லிங்கத்தின் உச்சியைப் பார்த்து விட்டா வந்தார்? உண்மையைச் சொல்" என்று கேட்டார். தாழம்பூவும் "ஆமாம். உண்மையே. பிரம்மா இந்த லிங்கத்தின் உச்சி வரை போய் அங்கே இருந்த என்னை எடுத்து வந்தார்" என்று பொய் சொல்லியது.

ஆனால் விஷ்ணுவோ தாழம்பூ கூறியதை நம்பாமல் "பிரம்மா, உலகில் பணத்தாசையால் பொய் சாட்சி சொல்ல யாரும் கிடைப்பார்கள். இந்தத் தாழம்பூவிற்கு நீ ஏதாவது ஆசை காட்டி இருக்கிறாய் போலிருக்கிறது. இது கூறுவதை நான் நம்ப மாட்டேன். எனவே சிவனார் இது பற்றிக் கூறும் முடிவைத்தான் ஏற்க முடியும்" என்றார்.

அப்போது லிங்கம் மறைந்தது. சிவனும் அவர்களின் முன் வந்து

"தாழம்பூ சொன்னது பொய். அது என் தலையிலிருந்து கீழே விழுந்தது. நடுவழியில் அதைப் பார்த்த பிரம்மா அதனை எடுத்துக் கொண்டு திரும்பி விட்டார். இவர் என் உச்சாந்தலையைப் பார்க்கவில்லை. பொய் சொன்னதால் இன்று முதல் தாழம்பூ என்னைப் பூசிக்க உதவக் கூடாது" எனக் கூறி சாபமும் அதற்குக் கொடுத்தார். பிரம்மாவும் தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டு சென்றார். விஷ்ணுவும் சிவனை வணங்கி விட்டுச் சென்றார்.

முனிவர் இருவருக்கும் இந்தக் கதையைக் கூறி "ஆசை யாரைத் தான் விட்டது? இதற்கு உதாரணம் பிரம்மாவும் விஷ்ணுவும். அந்த அம்பிகைதான் ஆசையால் அசையாதவள். அவளை வழி படுங்கள்" என்றார்.

சரதனும் "ஓ! அப்படியே செய்கிறோம்" எனவே முனிவரும் "நவராத்திரியின் போது தேவியைப் பூஜை செய்வது சிறந்தது. சக்கரம் வரைந்து, விரதம் இருந்து மந்திரங்களை ஜெபித்து, நெய்யும் பாலும் சர்க்கரையும் கலந்து பாயசம் வைத்து தேவிக்கு அர்ப்பணம் செய்ய வேண்டும். அந்தணர்களுக்கும் மற்றவர்களுக்கும் தானம் செய்ய வேண்டும். ஒன்பது நாட்கள் பூஜை செய்த பின்

பத்தாவது நாள் பூஜை முடிவிற்கான பாரணை செய்து சாப்பாடு போட வேண்டும். இப்படிச் செய்தால் தேவியின் அருள் பெற்று யாரும் நற்கதி பெறலாம்" என்றார்.

இருவரும் தேவியைப் பூஜை செய்தால் தாம் இழந்தவற்றை எல்லாம் மீண்டும் பெறலாம் எனத் தெரிந்து கொண்டார்கள். இருவரும் முனிவரை வணங்கி தேவியைப் பூஜிக்க வேண்டிய மந்திரத்தை அவரிடமிருந்து உபதேசம் பெற்றார்கள்.

முனிவரும் அவர்களுக்கு நவாட்சர மந்திரத்தை உபதேசித்தார். அவர்கள் இருவரும் முனிவரை

30 - Paint
www.chandamama.com//archive/PdfFlip.php?lang=tamil&yr=1980&mnth=2&adOpt=0 - Google Chrome
www.chandamama.com//archive/PdfFlip.php?lang=tamil&yr=1980&mnth=2&adOpt=0
Fullscreen Exit 60 / 72

வணங்கி விடை பெற்றுக் கொண்டு ஒரு நதிக்கரையை அடைந்தார்கள். அங்கு இலைகளையே உணவாகக் கொண்டு அவர்கள் இரண்டு வருடகாலம் மந்திரத்தை ஜெபித்தார்கள்.

அவர்களது கனவில் ஒரு நாள் தேவி தோன்றினாள். ஆனாலும் அவர்கள் அவளை நேரில் தரிசிக்க வேண்டும் என்று தொடர்ந்து தவம் செய்யலானார்கள்.

அவர்கள் நீரை மட்டும் ஆகாரமாகக் கொண்டு மேலும் மூன்று வருடங்கள் தவம் புரிந்தார்கள். அப்போதும் தேவி வராததால் ஹோமத் தீ வளர்த்து அதில் தம் உடலையே அர்ப்பணிக்கத் தயாரானார்கள்.

அப்போது தேவி அவர்கள் முன் தோன்றினாள். சுரதன் தான் இழந்த நாட்டை மீண்டும் பெற்று முன் போல சுகவாழ்வு வாழ வரம் கேட்டான். தேவியும் "நீயும் விரைவிலேயே உன் எதிரிகளை வென்று இழந்த நாட்டைப் பெறுவாய். உன் மந்திரிகளே உன்னைத் தேடி வருவார்கள். கவலைப்பட வேண்டாம். இனி உனக்கு நல்ல காலமே" என அருளினாள்.

சுரதனுக்கும் தேவி கூறியபடியே நாடு திரும்பக் கிடைத்தது. அவனது மந்திரிகளே வந்து அவனை எதிரிகளோடு போர் புரியச் சொல்லி நாட்டை மீட்க வழி செய்தார்கள். அவனும் இழந்த நாட்டை மீண்டும் அடைந்து சுகமாக நீண்ட காலம் ஆட்சி புரிந்தான்.

ஆனால் வணிகனோ "அம்மா! எனக்கு சொத்து வேண்டாம். சுகம் பெற அருள் வேண்டும்" என வேண்டினான் தேவியும் அவனுக்குப் பேரறிவு கிடைக்க அருள் புரிந்தாள். அவனும் சன்னியாசியாகி நாடெங்கும் போய் அறிவுரைகள் கூறி மக்களுக்கு உபதேசித்தான் முடிவில் தேவியின் பாதகமலங்களை அடைந்தான்.

திருடன் யார்?

வெகு காலத்திற்கு முன் ஒரு நாட்டில் ஒரு பணக்கார வியாபாரி இருந்தான். அவனுக்கு மூன்று புதல்வர்கள் இருந்தார்கள். அவன் இறக்கு முன் தன் மூன்று மகன்களையும் அழைத்து "நான் இனிப் பிழைக்க மாட்டேன். நான் கஷ்டப்பட்டு சம்பாதித்ததில் இந்த மூன்று ரத்தினங்களே விலையுயர்ந்தவை. ஆளுக்கு ஒன்றாக இதனை வைத்துக் கொள்ளுங்கள்" என்று கூறினான்.

சில நாட்களில் அந்த வியாபாரி இறக்கவே மூன்று மகன்களும் பிரிந்து போவது எனத் தீர்மானித்துக் கொண்டார்கள். எனவே அவர்கள் மூன்று ரத்தினங்கள் வைக்கப்பட்டிருந்த பெட்டியை எடுத்துத் திறந்த போது அதில் இரண்டு இரத்தினங்களே இருப்பதைக் கண்டார்கள். மூன்றாவதை யாரோ திருடி விட்டார்கள். ரத்தினப் பெட்டி வீட்டில் பத்திரமாகத் தான் வைக்கப்பட்டிருந்தது. அதை யாரும் தொடவே இல்லை. சகோதரர்களும் கூட அது வரை திறந்தும் பார்க்கவில்லை. திருடன் மூன்று சகோதரர்களில் யாராவது ஒருவனாகத்தான் இருக்க வேண்டும்.

மூத்தவன் அப்போது "நம்மில் யாரோ ஒருவன் தான் இரத்தினத்தை எடுத்திருக்கிறான். நாளைக் காலைக்குள் அதை இந்தப் பெட்டிக்குள் வைத்து விட வேண்டும். அப்போது இந்தத் திருட்டு வெளியாருக்கும் தெரியாது; நம் குடும்ப கௌரவமும் நிற்கும்" என்றான். அதற்கு மற்ற இரு சகோதரர்களும் ஒப்புக் கொண்டார்கள். ஆனால் மறுநாள் காலை பெட்டியைத் திறந்த போது

நா. சுப்பிரமணியன்

start Compose Mail - Yaho... www.chandamama.c... My Pictures 30 - Paint 9:39 AM

31 - Paint
www.chandamama.com//archive/PdfFlip.php?lang=tamil&yr=1980&mnth=2&adOpt=0 - Google Chrome
Fullscreen Exit 62 / 72



மூன்றாவது இரத்தினம் இருக்கவில்லை.

அப்போது மூத்தவன் "இப்போது நமக்கு வேறு வழியே இல்லை. விஷயம் வெளியாருக்குத் தெரிந்துதான் ஆக வேண்டும். அப்போது தான் திருட்டுப் போன இரத்தினம் கிடைக்கும், நாமும் சுலபமாகப் பங்கு போட்டுக் கொள்ளலாம் இனி அரசரிடம் புகார் செய்வோம்" எனக் கூறித் தன் இரு சகோதரர்களையும் அழைத்துக் கொண்டு போய் மன்னனிடம் இரத்தினம் திருட்டுப் போனது பற்றி முறையிட்டான். அரசன் வியாபாரியையும் அவரது மூன்று மகன்களையும் நன்கு அறிவான். எனவே அவன் "இந்த விசாரணை நடத்த எனக்கு மனக் கஷ்டமாக இருக்கிறது. இதைக் கண்டு பிடிக்க வேண்டியதும் அரசனிய எனது கடமை. எனவே கொஞ்ச நாட்கள் இந்த ஊரில் இருங்கள். ஒரு கிழவியின் வீட்டில் நீங்கள் தங்கிச் சாப்பிட எல்லா ஏற்பாடுகளையும் செய்கிறேன்" என்றான். அவர்களும் அரசன் கூறிய கிழவியின் வீட்டில் போய்த் தங்கினார்கள்.

இரண்டு நாட்களுக்குப் பின் அரசன் அக் கிழவியை அழைத்து "இந்த மூவருள் ஒருவன் திருடன். அவன் யார் என்பதைக் கண்டு பிடித்தாக வேண்டும்" என்று இரத்தினங்களைப் பற்றி விவரமாகக் கூறினான்.

கிழவியும் "கவலைப் படாதீர்கள். அவர்களில் யார் திருடன் என்பதை நான் கண்டு பிடித்துச் சொல்கிறேன்" என்று கூறிப் போனாள். அரசனும் "அப்பாடா! நான் எவ்வளவு முயன்றும் கண்டு பிடிக்க முடியவில்லை. இந்தக் கிழவி புத்திசாலி. எப்படியாவது கண்டு பிடித்து விடுவாள்" என எண்ணி ஆறுதல் அடைந்தான்.

அன்றிரவு கிழவி அந்த மூன்று சகோதரர்களுக்கும் சாப்பாட்டைப் போட்டவாறே ஒரு சிறு கதையைச் சொன்னாள்.

"சிம்மகேது என்ற மன்னனின் மகள் குணவதி. அரசன் தன் மகளுக்கு கல்வி கற்பிக்க நல்ல ஆசிரியரையும் தேர்ந்தெடுத்தான். அவரும் பயிற்சியை முடித்தார். அப்போது குருதட்சிணையாக என்ன கொடுப்பது என்று அரசகுமாரி அவரிடம் கேட்க அவரும் "நீ உன் விவாகம் ஆனதும் அன்றிரவே எல்லா நகைகளையும் போட்டுக் கொண்டு வந்து என்னைத் தனிமையில் சந்திக்க வேண்டும். இதுதான் நீ எனக்குக் கொடுக்க வேண்டிய குருதட்சணை" என்றார். அவளும் அவ்வாறே செய்வதாகக் கூறினாள். அரசகுமாரியின் விவாகமும் நடைபெற்றது.

விவாகமான அன்றிரவே அரசகுமாரி தன் கணவனிடம் தான் தன் குருவுக்கு அளித்த வாக்கைக் கூறவே அவனும் அவளைப் போக அனுமதித்தான். குணவதியும் எல்லா நகைகளையும் போட்டுக் கொண்டு தன் குருவைச் சந்திக்கச் சென்றாள்.

வழியில் ஒரு திருடன் அவளை மடக்கி கத்தியைக் காட்டி "உம். உன் நகைகளை எல்லாம் கழற்றி என்னிடம் கொடு" என மிரட்டினான். குணவதியும் தான் தன் குருவிற்குக் கொடுத்த வாக்கை அவனிடம் கூறி தன் குருவைச் சந்தித்து விட்டுத் திரும்பி வந்து நகைகளை எல்லாம் அவனிடம் கொடுப்பதாகக் கூறினாள். அவ

start Compose Mail - Yaho... www.chandamama.c... My Pictures 31 - Paint 9:39 AM

32 - Paint
www.chandamama.com//archive/PdfFlip.php?lang=tamil&yr=1980&mnth=2&adOpt=0 - Google Chrome
www.chandamama.com//archive/PdfFlip.php?lang=tamil&yr=1980&mnth=2&adOpt=0
Fullscreen Exit 64 / 72

னும் அதற்குச் சம்மதித்து அவனுக்காக அங்கேயே காத்திருப்பதாகக் கூறினான்.

குணவதியும் தன் குருவின் வீட்டை அடைந்தாள். அவரும் அவள் தான் கொடுத்தவாக்கை நிறைவேற்றியது கண்டு ''அம்மா! நான் உனக்குக் கற்றுக் கொடுத்த கல்வி வீண் போகவில்லை. எவ்வித ஆபத்தையும் இலட்சியம் செய்யாமல் நீ சொன்ன சொல்லைக் காக்கப் பாடுபட்டாய். இதுவே என் குருதட்சிணை. நீ இனி திரும்பிப் போய் உன் கணவனோடு சுகமாக வாழ்க்கை நடத்து'' எனக் கூறி அவளை ஆசிர்வதித்து அனுப்பி விட்டார்.

குணவதியும் தன் குருவை வணங்கித் திரும்பிச் சென்று வழியில் காத்து நின்ற திருடன் முன் போய் நின்றாள். ''இதோ நான் வந்து விட்டேன். என் நகைகளைக் கழற்றிக் கொடுக்கிறேன்'' என அவள் கூறினாள்.

அது கேட்டு அத்திருடன் மனம் மாறி ''அம்மணி, என்னை மன்னித்து விடுங்கள். உங்களைப் போன்றவர்கள் இருக்கும் போது நான் இவ்வுலகில் திருடிப் பிழைப்பது அவமானம்'' எனக் கூறி அவளை வணங்கி விட்டு ஓடியே போய் விட்டான்.

குணவதி அரண்மனைக்கு வந்து தன் கணவனிடம் வழியில் கண்ட திருடனையும் அதன் பின் நடந்ததை எல்லாம் கூறினாள். அவளது கணவனும் மிகவும் மகிழ்ந்து அவளோடு சுகமாக இல்வாழ்க்கை நடத்தி வந்தான்''

கிழவி கூறிய இக்கதையை அந்த மூவரும் கேட்டு மகிழ்ந்தார்கள். அப்போது கிழவி அவர்களிடம் ''எனக்கு ஒரு சந்தேகம். இந்தக் கதையில் வருபவர்களில் யார் உள்ளம் உயர்ந்தது. உதார குணம் உடையது. இவற்றில் யார் மேலானவர். இந்த சந்தேகத்தை நீங்கள் தீர்க்க முடியுமா?'' என்று கேட்டாள். மூத்த மகன் சற்று யோசித்து விட்டு ''விசுவாசமான

அன்றிரவே தன் மனைவியை அவனது குருவிடம் அனுப்பிய கணவனே உயர்ந்தவன்'' என்றான். இரண்டாவது மகனோ ''அவனை விட குருவே உயர்ந்தவர்'' என்றான்.

மூன்றாவது மகனோ ''தன் கைக்கு அரசகுமாரியின் நகைகள் கிடைக்கும் வாய்ப்பு இருந்தும் அவற்றை வாங்கிக் கொள்ளாமல் அரசகுமாரியைப் போக விட்ட திருடனே உயர்ந்தவன்'' என்றான்.

அப்போது கிழவி சிரித்து விட்டு ''தன் கணவன் கோபிப்பான் என்றும் திருடன் நகைகளைக் கொடுக்கா விட்டால் தன்னைக் கொல்வான் என்றும், குருவைத் தனிமையில் சந்தித்தால் என்ன அவமானம் நேருமோ எனவும் சற்றும் பயப்படாமல் இருந்த அரசகுமாரி உங்களுக்கெல்லாம் உயர்ந்தவளாகப் படவில்லையா?'' என்று சிரித்துக் கொண்டே கேட்டாள். மறுநாள் அரசனிடம் கிழவி போய் ''அரசே. அந்த மூவருள் கடைசி மகனே திருடன். நீங்களே அவனை விசாரித்துப் பாருங்கள். ஏனெனில் நான் சொன்ன அந்தக் கதையைக் கேட்டு திருடனைப் புகழ்ந்தவன் அவன் தான். மற்ற இருவரும் திருடனைப் பாராட்டாமல் மற்றவர்களைப் பாராட்டினார்கள்'' எனக் கூறினாள். அரசனும் கிழவியின் திறமையைப் பாராட்டினான்.

மறுநாள் அரசன் அந்த சகோதரர்களைக் கூப்பிட்டு ''அந்த இரு இரத்தினங்களையும் மூத்தவனும் இரண்டாவது மகனும் எடுத்துக் கொள்ள வேண்டியது'' என்றான். மூன்றாவது மகன் பதில் பேசாமல் தலை குனிந்து கொண்டான். அரசனின் தீர்ப்பிற்கு எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. அதன் பிறகு மூன்று சகோதரர்களும் தம் ஊருக்குப் போய் சொத்தைப் பிரித்துக் கொண்டு சுகமாக வாழ்ந்தார்கள். அதற்குப் பின் இரத்தினத்தைப் பற்றிய பேச்சே எழவில்லை.

start Compose Mail - Yaho... www.chandamama.c... My Pictures 32 - Paint 9:39 AM

www.chandamama.com//archive/PdfFlip.php?lang=tamil&yr=1980&mnth=2&adOpt=0 - Google Chrome

போட்டோ வாக்கியப் போட்டி :: பரிசு ரூ. 25

இந்தப் போட்டியின் வெற்றி பெற்ற தலைப்புகள் 1980 ஏப்ரல் மாத இதழில் வெளியிடப்படும்

A. L. Syed

A. L. Syed

★ தலைப்புகள் ஒரு வார்த்தையிலிருந்து நாலைந்து வார்த்தைகளுள் இருக்கலாம். இரு தலைப்புகளுக்கும் தொடர்பு இருக்க வேண்டும்.

★ பிப்ரவரி 10 தேதிக்குள் போட்டிக்கான தலைப்புகள் எமக்கு வந்து சேர வேண்டும்.

★ எம்மிடம் வந்து சேர்ந்த தலைப்புகளில் நாம் சிறந்ததாகக் கருதும் தலைப்புகளுக்கு ரூ. 25 பரிசு. இது இரு தலைப்புகளுக்கும் சேர்த்தே.

★ தலைப்புகளை தபால் கார்டில் மட்டுமே எழுதி அம்புலிமாமா 'போட்டோ வாக்கியப் போட்டி' சென்னை-26 என்ற முகவரிக்கு அனுப்பவும்.

டிசம்பர் மாதப் போட்டி முடிவு

முதலாவது போட்டோ: ஆசைக்கு ஓர் அளவில்லை
இரண்டாவது போட்டோ: அன்பிற்கு ஓர் இணையில்லை

பரிசு பெறுபவர்: திரு. க. துரைசாமி,
பாப்பம்பட்டி, மதுரை மாவட்டம்.

பரிசுத் தொகை ரூ. 25-ம் இம்மாதக் கடைசிக்குள் அனுப்பி வைக்கப்படும்.

Printed by B. V. REDDI at Prasad Process Private Ltd., and Published by B. VISWANATHA REDDI for CHANDAMAMA CHILDREN'S TRUST FUND (Prop. of Chandamama Publications) 2 & 3, Arcot Road, Madras-600 026 (India). Controlling Editor: NAGI REDDI

The stories, articles and designs contained herein are exclusive property of the Publishers and copying or adopting them in any manner will be dealt with according to law.

வீட்டிலிருந்தவாறே ஆங்கிலத்தில் உரையாடக் கற்பிக்கும் கோர்ஸ்!

PAGES: 384

Rapidex English Speaking Course

ஆங்கிலத்தில் உரையாடக் கற்பதற்காக, இனி வகுப்பிற்கும் போகத் தேவையில்லை. ரேபிடெக்ஸ் இங்கிலீஷ் ஸ்பீக்கிங் கோர்ஸ் இதற்குச் சிறந்த ஆசானாக இருக்கும்.

விலை: ரூ. 21/-
தபால் செலவு ரூ. 4/-

ரேபிடெக்ஸ் கோர்ஸின் வேறு சிறப்புக்கள்:

* நாடு முழுவதும் இந்த வகையில், 70 லட்சம் பேர்களுக்குப் பயனளித்திருக்கும் சிறப்பான கோர்ஸ்.
* [illegible] மற்றும் வேறு 5 மொழிகளில் வெளியிடப்பட்டுள்ளது. மேலும் 4 மொழிகளில் அச்சிடப்பட்டு வருகிறது.
* இந்தியா முழுவதிலுமுள்ள 25 ஆசிரியர்களால் [illegible] புத்தக [illegible] இப்புத்தகத்தில் [illegible]
* [illegible] ஆசிரியர்கள் பரிந்துரைக்கும் கோர்ஸ்.
* நவீன [illegible] முறையில், எழுதப்பட்ட இப்புத்தகம், [illegible] ஆங்கிலம் பேசப் பயன்படும்.
* அறிஞர்கள், மாணவர்கள், வியாபாரிகள், அலுவலர்கள், கடைக்காரர்கள் மற்றும் இல்லத்தரசிகள் விரும்பி கற்கும் கோர்ஸ்.

சிறப்புக்குச் சான்று— ரேபிடெக்ஸ் கோர்ஸ் குறித்து பத்திரிகைகளின் கருத்து

[illegible] —டெக்கான் ஹெரால்டு.

[illegible] —தினமணி

[illegible] —[illegible], சென்னை

புத்தகங்களை வி.பி.பி. மூலம் தருவித்துக்கொள்ள, முகவரி—
புஸ்தக் மஹல், காரி பாவலி, தில்லி-110006

Stockists— **'RAPIDEX COURSE' Available At**

- Madras Book House, 19, Brindavan Street, West Mambalam, Madras-600033
- P. T. Bell and Co., 16, Sunkurama Chetty Street, Madras-600001
- Paragon Traders, 8-C, Pycrofts Road, Triplicane, Madras-600005.

Other Booksellers—

- Rama Book Centre, 126, High Road, Tirunelveli-627001.
- Ajantha Book Centre, 83, First Agrahram, Salem-636001.
- Radhamani Book-sellers 60-A, Raja Street, Coimbatore, 1001.
- V. T. Govindaraju Mudaliar, 27, Long Bazar, Vellore-632001.
- Sri Venkateshwara Book Depot, 24, Thiruvalluar, Angadi, Chidambaram-608001.
- Sumathi Publications, 3, Tamil Sangam Bldg., 46-A, W. B. Road, Tiruchirupalli-620001.
- Balachandaran Book House, 8-3, Meenakshy Nilayam, Central Bus Stand, Madurai-625001.

Also Available at all leading Book-Shops, Roadways Book-Stalls, Higginbothams Railway Book-stalls & their City branches throughout South India.

34 - Paint
www.chandamama.com//archive/PdfFlip.php?lang=tamil&yr=1980&mnth=2&adOpt=0 - Google Chrome
www.chandamama.com//archive/PdfFlip.php?lang=tamil&yr=1980&mnth=2&adOpt=0
Fullscreen Exit 68 / 72

WANTED

[illegible]

விண்ணப்பதாரர்கள் 1950க்கும் 1956க்கும் இடையில் பிறந்திருக்க வேண்டும்.

தேர்ந்தெடுக்கப்படுகிற SC-ST விண்ணப்பதாரர்களுக்கு 140 ரூபாயும் மற்றவர்களுக்கு 120 ரூபாயும் உதவித் தொகை கொடுக்கப்படும்.

[illegible] Study Tour [illegible] ரூ. 360 முதல் ரூ. 420 வரை [illegible]

[illegible] Postal Order 24-1-'80க்கு முன் [illegible]

[illegible]

Principal

COLLEGE OF SOUTH INDIAN AGRICULTURAL TECHNICAL TRAINING CENTRE
136, Bhaskar Colony, Virugambakkam
MADRAS - 600 092

start Compose Mail - Yaho... www.chandamama.c... My Pictures 34 - Paint 9:40 AM

35 - Paint
www.chandamama.com//archive/PdfFlip.php?lang=tamil&yr=1980&mnth=2&adOpt=0 - Google Chrome
www.chandamama.com//archive/PdfFlip.php?lang=tamil&yr=1980&mnth=2&adOpt=0
Fullscreen Exit 70 / 72

start Compose Mail - Yaho... www.chandamama.c... My Pictures 35 - Paint 9:40 AM

36 - Paint

www.chandamama.com//archive/PdfFlip.php?lang=tamil&yr=1980&mnth=2&adOpt=0 - Google Chrome

www.chandamama.com//archive/PdfFlip.php?lang=tamil&yr=1980&mnth=2&adOpt=0

Fullscreen | Exit | 72 / 72

start | Compose Mail - Yaho... | www.chandamama.c... | My Pictures | 36 - Paint | 9:40 AM